596

ஸ்ரீ:

ஸ்ரீமதேராமாநுஜாய நம:

பூங்கோதை மாலை.

596
3 52

26 AUG 952

திருவல்லிக்கேணித்
தமிழ்ச்சங்க வெளியீடு, 37.

405
ACL-TNAL
00348

அன்பளிப்பு.

சங்கக் காரியாலயம் :
ஆநந்தபிருந்தாவநம்,
ஸ்ரீ மௌனசுவாமிகள் மடத்துத் தெரு,
அம்பத்தூர்.

22–8–1952.

O, 194, P
N 52
103686

ஸ்ரீ:

திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கப் பிரசுரம்.

இலக்கம்.	வெளியீட்டின் பெயர்.	வள்ளலார் பெயர்.
1.	ஸ்ரீ ஆதிவண் சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் வைபவம்.	ஸ்ரீமான் வி. யன். சிங்காரவேலு முதலியார் அவர்கள்.
† 2.	தேசிகர் நூற்றந்தாதி.	ஸ்ரீமான் ஆர். கேசவய்யங்கார் அவர்கள்.
3.	மறைமுடித் தேசிகனார்.	ஸ்ரீமான் சுந்தரசேகர நாயக்கர் அவர்கள்.
4.	மணவாள மாமுனிகள்.	ஸ்ரீமான் ஸி. நரஸிம்மாசாரியார் அவர்கள்.
5.	அழகர் மாலை.	நற்றமிழன்பர்கள்.
6.	வேதாந்த தேசிக ருசகம்.	ஸ்ரீமான் ஆர். கேசவய்யங்கார் அவர்கள்.
† 7.	தோத்திர மாலை.	ஸ்ரீமான் எஸ். ஸ்ரீநிவாஸய்யங்கார் அவர்கள் திருத்தேவியார் ஸ்ரீரங்க நாயகி அம்மாள்.
† 8.	தொண்டர் மாலை.	ஸ்ரீபண்டித சிந்தாமணி கோபாலய்யங்கார் அவர்கள்.
9.	கம்பர் மாலை.	ராவ்ஸாஹெப். ஆர். ராமஸ்வாமி அய்யங்கார் அவர்கள்.
10.	பரிமுக மாலை.	ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸராகவாசாரியார் அவர்கள்.
11.	ஸ்ரீ ஆண்டாள் மாலை.	ஸ்ரீமான் பி. எஸ். திருமலை அய்யங்கார் அவர்கள்.
12.	ஸ்ரீ பார்த்தசாரதி மாலை.	ராவ்பஹதூர் கே. ஆர். ராமாநுஜம் அவர்கள்.
13.	திருவருண் மாலை. (33)	ஸ்ரீமான் ஆர். கேசவய்யங்கார் அவர்கள்.
14.	தூப்புல் வள்ளல் பழமொழிச் சிறப்பு. (34)	ப. ரெ. திருமலை அய்யங்கார்.
† 15.	அடைவு அமைக்கும் அற்புதன்.	ப. ரெ. திருமலை அய்யங்கார்.
† 16.	தமிழர் தொழு வேதாந்த வாசிரியன்.	ஸ்ரீமான் டி. எஸ். பார்த்தசாரதி அய்யங்கார் அவர்கள்.
17.	புகழ் மாலை.	தமிழன்பர்.
18.	கம்பர் தரும் கண்ணன்.	ஸ்ரீமான் பி. சேஷாத்திரி அய்யங்கார் அவர்கள்.
19.	முக்கோற்பகவர்.	ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸகோபாலய்யங்கார் அவர்கள்.
20.	ஸ்ரீ வீரராகவ மாலை.	ஸ்ரீமான் ரா. கிருஷ்ணய்யங்கார் அவர்கள்.
21.	திருமாமகள் மாலை.	திருப்புகழ்மணி பிரும்மஸ்ரீ டி. எம். கிருஷ்ணஸ்வாமி அய்யர் அவர்கள்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:



பூங்கோதை மாலை.

திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்க வெளியீடு-37.

இது

ஸர்வமங்கள நந்தனவாண்டு சிங்கத்திங்கள் ஏழாம்
நன்னாள் வெள்ளிக்கிழமை திருப்பூரத்திருநா
ளன்று திருமந்திர நகரம் (தூத்துக்குடி)
ஸ்ரீ பூமிநீளா ஸமேத ஸ்ரீ வைகுண்ட
பதிப் பெருமாள் திருவடிகளில்
இடப்பெற்ற காணிக்கை.

22-8-1952.

முதற் பதிப்பு—ஆகஸ்டு, 1952

Kabeer Printing Works, Madras (2012)

ஸ்ரீ:

உள்ளுறை.

பக்கம்.

சித்ரபடம்.

ஸ்ரீ. பி. எஸ். ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமி யும் அவர் திருத்தேவியாரும். ... 6.

[பூங்கோதை மாலை வள்ளலாரின் பெற்றோர்.]

முகவுரை. ... 7.

[பந்தல்குடி பாரத்வாஜ மாடபூசி ரெ. திருமலை அய்யங்கார், தமிழ் வித்துவான், காரியதரிசி, திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கம்.]

கோதாஸ்துதி. ... 23.

(ஸ்ரீ வேதாந்த தேசிகர்).

[தமிழ்ப்பாக்கள் மொழிப்புரையுடன்.]

ஸ்ரீ. பி. எஸ். ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமியும்
அவர் திருத்தேவியாரும்.

ஸ்ரீ :

முகவுரை.

வேயர்புகழ் வில்லிபுத்தூ ராடிப் பூர
மேன்மேலு மிகவிளங்க விட்டு சித்தன்
றூயதிரு மகளாய்வந் தரங்க ஞர்க்குத்
துழாய்மாலை முடிசூடிக் கொடுத்த மாதே!
நேயமுடன் றிருப்பாவைப் பாட்டா றைந்து
நீயுரைத்த தையொருதிங் கட்பா மாலை
யாயபுகழ் நூற்றுநாற் பத்து மூன்று
மன்புடனே யடியேனுக் கருள்செய் நீயே.
—(தேசிகமாலை. பிரபந்தசாரம். 10)

திருமாலின் அபிநவதசாவதாரம் எனக் கொண்டாடப்பெற்று வருபவர்கள் ஆழ்வார்கள். இவர்களை "மாலுகந்த வாசிரியர்" எனக் குறிப்பர் தூப்புல் மறைமுடித் தேசிகனுர். திருமகளார் தனிக் கேள்வனால் மயர்வற மதிநலம் அருளப் பெற்றவர்களும் இவர்களே. இவர்கள் ஆறிருவர். இவர்களின் அடைவை,

வையகமெண் பொய்கைபூ தம்பே யாழ்வார்
மழிசையர்கோன் மகிழ்மாறன் மதுர கவி
பொய்யில்புகழ்க் கோழியர்கோன் விட்டு சித்தன்
பூங்கோதை தொண்டரடிப் பொடிபா ணாழ்வா
ரையனருட் கலியன் * * * * *
* * ஆறிருவர் * * * *

என்ற தேசிகமாலைப் பாசுரம் (பிரபந்தசாரம். 17) தெளிவிக்கும். சந்தமிகு செந்தமிழில் உள்ள உயிர் எழுத்துக்கள் மூந்நான்கு என்பதை இங்கு நினைக.

மங்கையர்கோ னென்றிவர்கண் மகிழ்ந்து பாடுஞ்
செய்யதமிழ் மாலைகளுந் தெளிய வோதித்
தெளியாத மறைநிலங்க டெளிகின் றோமே.
—(தேசிகமாலை. அதிகார சங்கிரகம். 1)

என்பதும் அத்தூப்புல் வள்ளலார் பணிப்பு.

ஆழ்வார்களின் அடைவில் எட்டாவதாகத் திகழ்பவர் **விட்டுசித்தர்.** இவர் தம் தூய திருமகளாரே **பூங்கோதை.** இவரே திருப்பாவை. இவரே வில்லிபுத்தூர்ச் செல்வி. இவரே சூடிக்கொடுத்த நாச்சியார். இவரே ஸ்ரீ **ஆண்டாள்.** இம்மா மகளை, 'அல்லிநாள் தாமரைமேல் ஆரணங்கின் இன்துணைவி'; 'மல்லி நாடாண்ட மடமயில்'; 'மெல்லியலாள்'; 'ஆயர்குல வேந்தன் ஆகத்தாள்'; 'தென்புதுவை வேயர் பயந்த விளக்கு'; 'கோலச்சுரி சங்கை மாயன் செவ்வாயின் குணம் வினவும் சீலத்தனள்'; 'தென் திருமல்லி நாடி'; 'செழுங்குழல் மாலைத் தொடை தென்னரங்கருக்கீயும் மதிப்புடைய சோலைக்கிளி'; 'சூடிக் கொடுத்த சுடர்க் கொடி'; 'சுரும்பார் குழற் கோதை'; 'திருப்பாவை பாடிய செல்வி'; 'பட்டர்பிரான் புதல்வி'; 'வேயர் குல விளக்கு'; 'புதுவை நகர் ஆண்டாள்'; 'அரங்கர் மௌலி சூழ்கின்ற மாலையைச் சூடிக் கொடுத்தாள்'; 'மருவரு மளக வசுதை'; 'அன்ன வயல் புதுவை ஆண்டாள்'; 'ஒளி கொண்ட புத்தூர் உறை கோதை'; 'திருப்பாவை யென்னத் திருந்தியற் பாதீதந்த திருப்பாவை'; 'புதுவை வருவல்லி'; 'வேயர் புகழ் வில்லிபுத்தூர்க் கோன் கோதை'; 'மாலைப் பராவும் எதிராசனுக்கு இளைய பெண்'; 'மாண்மிக்க மரகதப் பெண்'; 'வடிவொப்பிலாத பெண்'; 'வர்ணிக் கொணாத பெண்'; 'வண்டமிழ் பாடவல பெண்'; 'வேலைப் பெண்'; 'மருவரங்கேசர்க்கு மோகப் பெண்'; 'விண்டுசித்தன் பெற்ற பெண்'; 'வில்லிபுத்தூர்க்கு முத்தான பெண்'; 'முத்திக்கு வித்தான பெண்'; 'பெண்டிர்கட் கரசான தெய்வங்களுயகம் பேரருட் கோதை'; 'சுருதி வண்டமிழ் பாடவல்ல பொற்கோதை' எனச் சான்றோர் பல படி யாகப் புகழ்ந்துள்ளனர்.

ஸ்ரீ ஆண்டாள் தன் அனுபவ பரீவாஹமாக அருளிச் செய்த பாமாலைகள் திருப்பாவையும் நாச்சியார் திருமொழியும். "திருப்பாவைப் பாட்டு ஆறைந்து". "சூடிக் கொடுத்த மாது உரைத்த தையொரு திங்கட் பாமாலை ஆய புகழ் நூற்று நாற்பத்து மூன்று". "பார்க்கோதை பாடல் நூற்றெழுபத்து மூன்று".

ஆழ்வார்களிடத்தும் அவர்கள் அருளிச் செயல்களிடத்தும் தூப்புற் பிள்ளையாகிய நம் **வேதாந்த** குருவுக்கு ஆராத ஆர்வம்

உண்டு. இதனைப் பல விடங்களில் இச் சந்தமிகு தமிழ் மறை யோன் பரக்க நிரூபித்துள்ளார்.

"ஸ்ரீ கோதாஸ்துதி" என்பது ஸ்ரீ ஆண்டாள் விஷய மான இருபத்தொன்பது சுலோகங்கள் கொண்டதோர் தோத்திரப் பாமாலை. இதில், ஸ்ரீ கோதை, ஸ்ரீ பூமிப்பிராட்டியாரின் அவதார விசேடம் என்பதும், பெரியாழ்வார் திருமகளாய் அவதரித்தாள் என்பதும், அவளுடைய பாமாலைகளின் பெருமையும், அவள் பகவானுக்குப் பூமாலை சூடிக்கொடுத்த விவரணமும் எம்பெரு மான் அநுபவித்த விசேஷ ப்ரகாரங்களும் அருளிச் செய்யப் பெற்றிருக்கின்றன. இப்பிரபந்த அவதார விஷயமாக கர்ண பரம்பரையான ஓர் ஐதிஹ்யம் கேட்கப் பெறுகின்றது. அஃது வருமாறு :—

கவிவாதி சிங்கம் எனப் பெரும் புகழ் படைத்த வேதாந்தா சாரியார் திவ்ய தேச யாத்திரையாக ஸ்ரீ வில்லிபுத்தூருக்கு எழுந்தருளிய சமயத்தில், அச்சமயத்தில் ஸ்ரீ ஆண்டாளுக்கு ஸ்ரீ வைசாக வசந்தோத்ஸவம் நடந்துகொண் டிருந்ததாகவும், அந்த உத்ஸவங் கண்டருளுவதற்காக கோதை நாச்சியார் நாடக சாலைத் தெருவிலிருக்கும் திருவேங்கடமுடையான் ஸந்நதிக்கு முன்பாக உள்ள வசந்த மண்டபத்துக்கு எழுந்தருள வீதி கண்டருளும்போது, பட்டர்பிரான் கோதையை வேதாந்த தேசிகன் மங்களா சாஸனஞ் செய்ததாகவும், அதனால் உண்டா கிய ஆநந்த பரீவாகம் உள்ளடங்காமல் அதிகரித்ததனாலே, அதற்குப் போக்கு வீடாக "கோதாஸ்துதி" எனும் திவ்ய ப்ரபந்தத்தை ஸ்ரீ ஆண்டாள் அந்த மண்டபத்துக்குள் எழுந் தருளுவதற்கு முன்பே செய்தருளியதாகவும், அதனாலே அது முதற்கொண்டு ஸ்ரீ ஆண்டாள் வைசாக வசந்தோத்ஸவத்தில் நாடகசாலைத் தெருவீதி கண்டருளும்போது, முன்னே கோயிற் கிரமப்படி பெரியாழ்வார் திருவம்சஸ்தராகிய வேதப்பிரான் பட்டராலே தொடக்கப் பெற்று ஸ்ரீ வைஷ்ணவர்கள் அனைவரும் இந்தப் பிரபந்தத்தை சேவித்து வருகின்றனர்.

இத்துதியை ஓதுமவன் "ஸ்ரீமானான ரங்க பர்த்தாவுக்கு பஹுமாந்யனாவான்". திருப்பாவை முப்பதுந்தப்பாமே உரைப் பவர் "ஈரிரண்டு மால்வரைத் தோள் செங்கட்டிருமுகத்துச் செல்வத் திருமாலால் எங்கும் திருவருள் பெற்று இன்புறுவர்".

ஸ்ரீ ஆண்டாளுக்குச் செங்கட்டிருமுகத்துச் செல்வத் திருமால் ஸ்ரீ ரங்கராஜன். 'ஆண்டாளரங்கர்க்குப் பன்னு திருப்பாவை' என்றபடி. ஸ்ரீ ரங்கராஜனே திருப்பாவைக்கு விஷயம். இத்துதி ஸ்ரீரங்கத்தில் அருளிச் செய்யப் பெற்றதென்று வைபவப்ரகாசிகை கூறும்.

இக் "கோதாஸ்துதி" "வட மொழியில் ஸ்ரீமத் வேதாந்தாசார்யஸ்வாமி அருளிச் செய்ததை **அனுமந்தன்பட்டி மதுர கவி ஸ்ரீநிவாஸய்யங்கார்** தமிழ்ச் செய்யுளாக மொழி பெயர்த்து இயற்றியதை புதுப்பட்டிக் கிராம முன்சீப் ஸ்ரீமான். நா. கி. வீரசிக்கு கவண்டரவர்களால் மதுரை ஹரிஸமய திவாகரம் பிரஸில் பதிப்பிக்கப்பட்டது. 1936-ஆம் வருஷம்." இதில் உள்ள "முகவுரை" (செந்தமிழாசிரியர் ஸ்ரீ. உ. வே. திரு. **நாராயணையங்கார்** ஸ்வாமி அநுக்ரஹித்தது) பின் வருமாறு :—

"கோதை பிறந்தவூர் கோவிந்தன் வாழுமூர்
சோதி மணிமாடந் தோன்றுமூர்—நீதியால்
நல்லபத்தர் வாழுமூர் நான்மறைகள் ஓதுமூர்
வில்லிபுத்தூர் வேதக்கோ னூர்"

என்று சிறப்பித்துச் சொல்லப்பட்ட ஸ்ரீ வில்லிபுத்தூர் என்னும் திவ்ய தேசத்திலே பூமிப் பிராட்டியின் அம்சமாய், 'ஆழ்வார் திருமகளாராண்டாள்' என்னும்படி பெரியாழ்வாருக்குப் புத்திரியாய்க் கருவிலே திருவுடையராய், பகவத் ப்ரேமத்தாலே அவனுகப்புக் கொத்த வடிவழகு காண விரும்பிச் சூடிக் களைந்த தொடை மாலையின் சௌகந்தியத்திலே எம்பெருமானை ஈடுபடப் பண்ணின காரணத்தாலே **கோதை சூடிக் கொடுத்தாள்** என்னுந் திருநாமமுடைய **கோதைப் பிராட்டி** விஷயமாக, பகவத் கண்டாவதார ரூபியாயும், சர்வ தந்த்ரஸ்வதந்த்ரராயும் ஸ்ரீமத் ராமாநுஜ ஸித்தாந்த ப்ரவர்த்தகராயும் கவிதார்த்திக கேஸரியாயும் எழுந்தருளியுள்ள **ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகராலே** வட மொழியில் அருளிச் செய்யப்பட்ட **கோதாஸ்துதி** என்னும் பிரபந்தம், ஸ்ரீ ஹநுமத்புர வாசியாய், தமிழ்க் கவிவாணர் தலைவராய், **பதினுயிரம் பாடல்** வரை பல் தமிழ்ப் பிரபந்தங்களும் புராண சரிதங்களும் பாடியுள்ள ஸ்ரீ. உ. வே. **மதுரகவி ஸ்ரீநிவாஸையங்கார்** ஸ்வாமியால் தமிழில் மொழி பெயர்த்துச் செய்யுள்

வடிவான தோத்திரப் பாமாலையாய்ப் பாடப்பட்டிருக்கிறது. இதில் ஒவ்வொரு முதனூற் சுலோகங்களும் முதலில் வரையப் பெற்று, அதற்குரிய மொழிகளமைய வெவ்வேறு செய்யுள் வகைகளால் நான்மடியாகப் பல கவிகள் பாடப்பட்டுள்ளன. அவை சொற் பொருட்டொடை நடை நோக்கும் துறை நோக்கும் உடையன வாய்ப் படிப்பவர்க்கு இனிமை பயப்பனவாய் அமைந்துள்ளன.

இவ்வாறு ஒரு பொருண் மேற் பல பாடல்களாகப் பாடியிருப் பது கற்பவர்க்குக் கவிபாடுந் திறத்தை எளிதிற் கற்பிக்கவல்லது; முதனூற் கருத்துக்களை வடமொழி பயிலாத தமிழரும் உணர்தற் கெளியது; ஒரு பொருண் மேல் மூன்றடுக்கும் கலிப்பாவின் தாழிசை போலக் கூறியது கூறலாகாது நுவல் பொருளை வலியு றுத்தற்குரியது; வைணவசமயக் கோட்பாடுகள் பலவும் அறி தற்குரியது.

இத்தகைய பிரபந்தத்தை ஆக்கியளித்த தமிழ்க் கல்விவாணர் ஸ்ரீ. உ. வே. மதுரகவி ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் பாடி யருளிய மற்று முள்ள பிரபந்தங்களையும், புராணசரிதங்களையும் அச்சிட்டு வெளியிட்டால் நலமாயிருக்குமென்றும், அவர்கள் அங் ஙனம் புரியுமாறு பலரும் ஆதரவு புரியவேண்டு மென்றும், அங் ஙனம் ஆதரிப்பது தமிழ் வளர்ச்சிக்கு உதவியாயிருக்குமென்றும் எண்ணுகிறேன்."

இப்பிரபந்தத்தின்கண் மிளிரும் "காப்பு", அவையடக் கம் எனும் பகுதிகளை அங்ஙனே இவண் தருவல்.

காப்பு.

திருப்புளியாழ்வார்.

சூழ்சாகை மன்னித் துளிரேறிய தொன்மரத்தின்
வீழாயி ரங்கண் மிளிர்ந்தாங்குயர் வேதநின்று
தாழா திணைந்த தமிழாயிரந் தந்தவள்ளல்
வாழ் நாழ்மை யில்லா மரமேயரம் வல்வினைக்கே. (1)

குறிப்பு :—[சாகை - கிளை. தொன்மரம் - ஆலமரம். வீழ் - விழுது. தமிழாயிரம் - திருவாய்மொழி. நாழ்மை - குற்றம். மரம் - திருப்புளியாழ்வார்.]

பெரியாழ்வார்.

திருப்பாவை முப்பதுஞ் செப்பினாள் செம்பொன்
உருப்பாவை யொண்புகழை யோத - விருப்பாரும்
இட்டர்பிரான் வேல் வழுதி யெங்கள்பிரா னென்றேத்தும்
பட்டர்பிரான் றாளிணை யே பற்று. (2)

[திருப்பாவை - முப்பது பாசுரமுடையதாக ஆண்டாள் அருளிச் செய்த தொரு பிரபந்தம். வழுதி - பாண்டியன். பட்டர்பிரான் - பெரியாழ்வார்.]

ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன்.

தண்டாத வேதந் தமிழ்மாமறை தன்பொருளுட்
கொண்டான் மராடித் தசநூறருள் கொண்டுரைத்தோன்
வண்டார் பொழில்சூழ் வடவேங்கட மன்னுபைம்பொற்
கண்டாவ தார னிருதாண்மலர் கைகுவிப்பாம். (3)

[மராடி - மரவடி; பாதுகை. தசநூறு - ஆயிரம். மராடித் தச நூறு - பாதுஹாஸஹஸ்ரம் என்கிற தோத்திரப் பிரபந்தம். கண்டாவதாரன் - ஸ்ரீவேதாந்த தேசிகன்.]

குருவணக்கம்.

வேயர் குலம்விளங்க மேவுந் திருக்கோதை
நாயகிதன் றேத்திரப்பா நான்பாடத் - தூயபுகழ்
நங்குரவன் நல்வீர ராகவனு நான்மறையா
றங்க முணர்ந்தோ னரண். (4)

சிறியதிருவடி.

கஞ்சனைக் கரிய நீல கண்டனைக் கடுக்குங் காட்சி
மஞ்சனை யிராமன் பாத மலரிணை மறவா தேத்து
நெஞ்சனை நிகரி லாத நெடும்பணைத் தோளி னானை
யஞ்சனை குமர னான வனுமனை யகத்துள் வைப்பாம். (5)

[கஞ்சன் - பிரமன். நீலகண்டன் - சிவன். கடுத்தல் - ஒத்தல்.]

அவையடக்கம்.

இருமொழிக் கெல்லை கண்டோ னெவற்றினும் வலிய னெம்மான்
திருவருள் பெறும்வே தாந்த தேசிக னருளிச் செய்த
மருவளர் கூந்தற் கோதா மான்மிய மால்கொண் டுள்ளம்
வருதமிழ்க் கவியாற் சொல்ல வல்லனோ மதியி லேனே. (6)

உணர்வின்முற் பவத்தி னூற்று முறுபவப் பிணியான் மாழ்கி
யணையினிற் கிடக்கை மேவி யரும் பெறற் கோதை யன்னை
துணைவரு மிம்மை யம்மை யாமெனத் துணிந்து சொற்ற
மணியன தமிழ்ப்பா மாலை வழுவென மதித்தி டாரே. (7)

எழுபான்மூன் றுண்டி னிரும்பிணிவாய்ப் பட்டே
இழுமெ னணைமே லிருந்தே - யழகான
கோதாத் துதியிதனைக் கூறினேன் கூறுபவோ
கோதாப் புலவர் குழாம். (8)

இந்நூலில் உள்ள **இறுதிப்பாடல்கள்** பின்வருவன.

எட்பூவுக் கிகனுடி யிந்திரையே
முதனின்னே டியைந்த வுள்ள
நட்பூறு மூவர்தமிற் கோதையுன்பான்
மயல் பெருகி நச்சி னுறைற்
கட்பூவிற் புவிபுரக்குங் காவலவ
னருச்சனைசெய் கனகப் பூவின்
மட்பூவின் மயலான மால்திருவேங்
கடமலைவாழ் மாயோன் றனே. (1)

சரணபங் கயமும் கருணையார் விழியுஞ்
சங்கணி மலர்க்கர தலமுங்
கிரணவொண் மணிமா மகுடமும் புதிய
கிளிமொழி முறுவலும் வயங்கக்
கரணமும் பொறியுங் காயமுங் கலங்கிக்
காலனுங் குறுகிடக் களைத்து
மரணமுற் றிடும்போ துற்றெனை யாள்வாய்
வளர்திருக் கோதைநா யகியே. (2)

சந்தீர்த்துப் பொன்கொழித்துத் தரளஞ்சிந்தித்
தலைசாய்த்து வரும்பொன்னித் துறைகடோறும்
பந்தேற்குந் தனமடவார் வதனம்போலப்
பங்கயக்கண் முகமலரு மரங்கந்தன்னுள்
ஐந்தேற்கும் பணுமகுடத் தழகுகாட்டு
மரவணைமேற் கண்வளரு மம்மானேடுங்
கொந்தேற்கு மலர்மாலை குழலிற்சூடிக்
கொடுத்தாளெ னுளக்கமலங் குடிகொண்டாளே. (3)

கரியதிரு வடிவுடைய பெரியோன்செய்ய
கமலமலர் மீதுபசுங் கமுகமுத்தஞ்
சொரியுமிளம் பொழின் மருவும் வில்லிபுத்தூர்த்
தோன்றியருள் கோதாயுன் றூயமன்றற்
குரியபத மகலுமுனந் தோளினேந்தி
யுறுதலினு லன்றேமு னுவந்து நிற்கும்
பெரியதிரு வடிமருங்கு நாளும்வைகப்
பெற்றனனுன் பெருமையெவர் பேசற்பாலார். (4)

ஒருமருப்பி னிடையேந்திப் புவிமகளா
முனைத்திருமா லுவந்து பின்னுங்
குருவிருக்கு மணிமுடியிற் கொண்டுசுமந்
துண்டுமதிக் குடையி னீழல்
தருவிருக்கும் வானவருஞ் சராசரமுங்
களிகூரத் தானே யாண்டுன்
அருகிருக்கு மகலாமற் கோதையெனி
லுனதுபுக ழுறையற் பாற்றே. (5)

"சூடிக்கொடுத்த நாய்ச்சியார் தோத்திரப்பாமாலை மூலமும் உரையும்" (செந்தமிழ்ப் பிரசுரம். 63) சேற்றூர்ச் சமஸ்தான வித்வானும், மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் அங்கத்தினருளொருவரும் அப்பு வையங்காரென்று பெயர் விளங்கி வந்தவருமாகிய கவிபூஷணம் நரசிம்மாசாரியர் இயற்றியவை. "இந்நூல் ஸ்ரீவில்லிபுத்தூரில் பின்னுரை வணங்கும் ஜோதியாய்க் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கிற ஸ்ரீ ஆண்டாளாகிய

கோதை சூடிக் கொடுத்த நாய்ச்சியார் விஷயமான தோத்திரப் பாடல்களின் தொகுதியாகும். இது தொகுத்தல் விரித்தல் தொகைவிரிமொழி பெயர்ப்பு என்னும் ஈரிரண்டு நூல் யாப்பினுள் மொழி பெயர்ப்பான வழி நூல். இதன் முதனூல் கோதாஸ்துதி யென்னும் ஒரு வடமொழிப் பிரபந்தமாகும். இதனை யருளிச் செய்தவர் ஸ்ரீ வைஷ்ணவ சமயாசாரியர்களுள் ஒருவராகிய **கவிதார்க்கிக கேஸரி யென்னும் ஸ்ரீ நிகமாந்த மகாதேசிக ரென்ப.** விஷயவைலக்ஷண்யத்தையும் வக்த்ருவைல க்ஷண்யத்தையும் உத்தேசித்து ஸ்ரீ வைஷ்ணவர்கள் அனைவரும் இந்தப் பிரபந்தத்தை அதிக ப்ரீதியோடு பாராயணம் பண்ணிவருகிறார் கள். இந்தப் பிரபந்தமானது அருமை பெருமையமைந்த கற்பனை அலங்காரங்கள் குணம் தொனி முதலியவைகளோடு விளங்குதலால் இரசிக சிகாமணிகளாகிய வித்வஜ்ஜன சேகரர்கள் அனைவருக்கும் பரமாநந்தத்தை விளைவிக்கத்தக்கதாயிருக்கிறது. இந்தப் பிரபந்தத்தின் பல ச்ருதிச்லோகத்தில் இந்தக் கோதாஸ் துதியை பக்தியோடு பாராயணஞ் செய்வோர்கள் ஸ்ரீ ரங்கராஜனுடைய பரம கிருபையாலே எங்குந்திருவருள் பெற்றின்புறுவார் கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது."

ஸ்ரீ கோதாஸ்துதியின் சொற்சுவையும் பொருட் சுவையும் அறிந்து அநுபவித்தவர்களுக்கே பூரணமாகத் தெரியும். ஸ்ரீ ஆண்டாளுடைய வ்ருத்தாந்தம் எவ்வாறு மனத்தைக் கவர வல்லதோ அவ்வாறு ரம்யமாய் வஸந்த திலக வ்ருத்தத்தில் படனஞ் செய்வதற்கும் பாடுவதற்கும் இன்பமாய் கோதையினுடைய் மணிச்சிலம்பின் மிழற்றல் போல் பரந்தாமனுக்கும் நமக்கும் வெகு மனோஜ்ஞமாய் அமைந்துள்ளது இத் தோத்திரப் பாமாலை. பகவத் பக்தியில் ஆழ்வார்களில் ஒருவராயும் அவனுடைய தேவிமார்களில் ஒருவராயும் இருக்கும் இருப்பு ஆண்டாளுக்கு அஸாதாரணம். ஆழ்வாராய்க் கொண்டு பாமாலை சூட்டியும் தேவியாய் நின்று பூமாலை சூட்டியும் அநுபவம் ஆண்டாளுக்கே உரியது. பாமாலை சூட்டிய தேவியும் இல்லை. பூமாலையைத் தாம் சூடிப் பெருமாளுக்குச் சூட்டிய ஆழ்வாரும் இல்லை. ஸ்வாமி தேசிகனுடைய பக்தி விகசித்து(மலர்ந்து)அருளிச் செய்யப் பெற்ற பிரபந்தமே கோதாஸ்துதி. அது அவருடைய மனத்தையே கவர்ந்தது என்பது 'பஹுகுணரமணீயாம்'

என்பதாலே அறியலாம். இத்துதி இருபத் தொன்பது சுலோகங்கள் கொண்டது. அசேதனதத்துவங்கள் 24, இருபத்தைந்தாவது தத்துவம் ஜீவாத்மா, 26-ஆவது தத்துவமாகிய பெருமாள் 1, அவருடைய தேவிமார் 3, ஆக தத்துவக் கணக்கு மொத்தம் 29-ஐ அநுஸரித்ததா யிருக்கலாம் இந்த எண்ணிக்கை. திருப்பாவைப் பாசுரங்கள் முப்பதில் இறுதிப் பாசுரத்தைச் சேர்க்காமல் 'சிற்றஞ் சிறுகாலை' யோடு பூர்த்தி செய்து 29 கணக்காக ஸ்வாமியின் திருவுள்ளம் இருக்கலாம். 29-ஆம் சுலோகத்தில் 'சரணகமலஸேவாம் சாச்வதீமப்யுபைஷ்யந்' என்றுள்ளது. 'உன்னைச் சேவித்து உன் பொற் ருமரையடியே போற்றும் பொருள்', 'நீ குற்றேவல் எங்களைக் கொள்ளாமற் போகாது இற்றைப்பறை கொள்வான் அன்று காண் கோவிந்தா எற்றைக்கு மேழேழ்பிறவிக்கும் உன் தன்னோடுற்றோமேயாவோம் உனக்கேநாம் ஆட் செய்வோம்' என்று 29-ஆம் பாசுரத்திலுள்ளதை அநுஸரித்ததே. 'இதி பஹுகுண ரமணீ யாம் வக்தி கோதாஸ்துதிம்ய:' என்று இருபத்தொன்பதாம் சுலோகத்தில் உள்ளது 'கோதை சொன்ன சங்கத் தமிழ் மாலை முப்பதுந் தப்பாமே இங்கிப் பரிசுரைப்பார்' (திருப்பாவை. 30) என்பதை முற்றும் அநுஸரித்தே. 'இதி வக்தி' என்பதற்கு மலர்ந்த பக்தியோடு தேசிகன் (வேங்கடேசன்) மனத்திலிருந்து உருகி (வாக்காக) வெளிவரும் ப்ரகாரமாக இப்படியே யார்தப்பாமே உச்சரிக்கிருரோ' என்பது பொருள். 'இப்பரிசுரைப்பார்' என்பதற்கும் 'கோதை எப்படி பக்தி வெள்ளமாக மனமகிழ்ந்து உரைத்தாளோ அப்படியே ஓதுபவர்' என்பது பொருள். ஸ்ரீரங்கராஜனிடம் கோதையின் பக்தியை யொக்கும், கோதையிடம் ஸ்ரீ தேசிகன் பக்தி. 'சங்கத் தமிழ் மாலை' என்பதற்குச் சிறந்த தமிழாகிய சங்கத் தமிழால் இயற்றிய பாமாலை என்றும் சொல்லலாம். 'பஹுகுண ரமணீயாம்' என்பது சங்கத் தமிழ் போல உயர்ந்த ஸம்ஸ்கிருதமான வைதர்ப்பீ பாஞ்சாலீ ரீதிகளில் அமைந்தது கோதையின் னருளால் இத்துதி என்று பேசுவதாகச் சொல்லலாம்.

ஸீதாதேவி தன் தாய் பூமிதேவியின் ச்ரோத்ரம் என்னும் வல்மீகத்தில் தோன்றியவரும், தன்னுடன் பிறந்தவருமான வால்மீகி கவியைக் கொண்டு ராமாயணத்தைப் பாடுவித்தாளே யொழிய, தானே கவி பாடவில்லை. ருக்மிணி தேவி விவாஹத்திற்கு முன்

ஸப்தபதி யென்னும் விவாஹப் பிரார்த்தனைக்காக ஏழே சுலோகம் பாடினள். தேவிமாரில் ஒருவரும் ஆண்டாளைப் போலக் கவி பாடவில்லை.

தனக்குவமை யில்லாத சீரும் சிறப்பும் எய்தி ஓங்கி விளங்கும் "கோதாஸ்துதி" தமிழில் சுலோகம், மதுரகவி ஸ்ரீநிவாஸையங்கார் ஸ்வாமியால் வெவ்வேறு செய்யுள் வகைகளால் நான்மடியாகப் பாடப் பெற்ற கவிகள், கவிபூஷணம் நரசிம்மாசாரியரால் இயற்றப்பெற்ற விருத்தப்பாக்கள், பொழிப்புரை இவற்றினேடு "பூங்கோதை மாலை" என்ற திருநாமத்துடன் இச்சங்கத்தின் முப்பத்தேழாவது வெளியீடாகப் பிரசுரிக்கலாயிற்று.

இத்தனி வெளியீட்டிற்குப் பூரண வுதவிபுரிந்த சீரியோரின் வரலாற்றைச் சிறிது அறிந்து கொள்ள வேண்டியது அத்யாவசியகம். அதனைச் சற்று விளக்குவேன் இங்கு. சந்தமிகு செந்தமிழ்த் தென் பாண்டி நன்னாட்டின் கண் விளங்கும் அக்கிரகாரங்களுள் பலவகையானும் சாலச் சிறந்தது தர்மாசனம் பந்தல்குடி. இவ்வூரின் பெருமையை அறிய ஆசையுள்ளவர்கள் பின்வரும் இச்சங்க வெளியீடுகளிற் றிகழும் "முகவுரை"ப் பகுதிகளைப் படிப்பாராக.

(1) ஸ்ரீ ஆண்டாள் மாலை. (11. 27–7–41ல் திருவாடித் திருப்பூரத் திருவிழாவில் ஸ்ரீவில்லி புத்தூரில் வழங்கப் பெற்றது.)

(2) வாரணமாயிரமாலை. (26. 30–4–1950ல் விருதுநகர் ஸ்ரீநிவாஸ மஹாலில் நடை பெற்ற விவாக விழாவில் வழங்கப் பெற்றது.)

(3) ஸ்ரீபார்த்தஸாரதியம்மான் பாமாலை. (27. 21–5–50ல் விருதுநகர் ஸ்ரீநிவாஸ மஹாலில் நடை பெற்ற மற்றொரு விவாஹ விழாவில் வழங்கப் பெற்றது.)

இப்பழம் பதியில் நங்கவரம் ஸாம வேதம் கௌசிக கோத்திரம் உயர வந்தவர் ஸ்ரீ. உ. வே. செல்லமய்யங்கார் ஸ்வாமி. இவர் வடகலை, தென்கலை என்ற இருகலையும் பயின்ற

நாவர் ; வேத பாரங்கதர் ; சிறந்த அத்யாபகர் ; அன்பிற்கு உறைவிடம் ; அநுபவஞானி ; சுற்றந்தழுவுஞ் சுசீலர் ; இராமநாதபுரம் சமஸ்தானத்தில் உயர்ந்த பதவிகளே வஹித்து சேதுநாட்டைச் சிறப்பிக்கச் செய்தவர் ; உயர்ந்த பதவிகளிலிருந்தும் பத்துடை அடியவர்க்கு எளியவராய் நின்றவர் ; நற்குண நிதி ; ஒழுக்கத்து நீத்தார் ; தூய உள்ளத்தர் ; ஆஹாரநியமத்தை அப்படியே கைக்கொண்டு நன்கு வாழ்ந்தவர் ; கால் நடையில் இவரை எவரும் வெல்ல இயலாது. அடியேனுடைய திருத்தகப்பஞரான **பந்தல் குடி பாரத்வாஜ மாடபூசி** ஸ்ரீ. ரெங்கய்யங்கார் ஸ்வாமியின் அத்தானே அவர். எனது தந்தையாரின் அத்தையான '**சூடி**' யின் அன்பில் வளர்ந்தவரே தாம் என்பதை அடியேனுடைய பிதா அடிக்கடி கூறி மகிழ்வர். நன்றி மறவாமையன்றே சான்றேர்க் கணி? இச் செல்லமய்யங்கார் ஸ்வாமியின் புதல்வர்கள் நால்வர். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், **ஸாமா வய்யங்கார் என்ற பி. எஸ்.** ஸ்ரீநிவாஸய்யங்கார், அழகரய்யங்கார், **நாராயணய் யங்கார்** என்பவர்களே அவ்வீரிருவர். இவர் மாப்பிள்ளேயே "ஸ்ரீ ஆண்டாள்மாலே" கொண்ட வள்ளலாராகிய **ஸ்ரீமான் பி. டி. ஸ்ரீநிவாஸய்யங்கார்** அவர்கள். அவரது திருமகளாராகிய **சேஷியம்மா**ளின் திருச்செல்வியாகிய **ஜானகி அம்மாளே** அடியேனுடைய வாழ்க்கைத் துணேயாக அமைந்துள்ளவள். மேற்குறித்த **ஸாமாவய்யங்கார் என்ற பி. எஸ். ஸ்ரீநிவாஸய்யங்கார்** ஸ்வாமி "முயற்சி திருவினேயாக்கும்" என்ற முப்பால் முதுமொழிக்கு முற்றிலக்காய் முன்னின்றவர் ; வடமொழி, தென்மொழி, ஆங்கிலம் நன்கு பயின்றவர் ; கடந்த பத்தொன்பதாம் நூற்றுண்டின் பிற்பகுதியில் **திருமந்திரநகரம்** என்ற சிறப்புப் பெயர் பெற்ற **தூத்துக்குடி** சேர்ந்து உழைப்பிஞல் உயர்ந்த உத்தமர் என எல்லாராலும் போற்றும் பெற்றி பெற்று விளங்கியவர் ; இன்சொல்லர் ; வேடிக்கையாக வினவும் கேளிக்கையர் ; ஆடம்பரமற்ற வாழ்க்கையர் ; ஆச்சர்யமான ஆசார்ய பக்தியுள்ளவர் ; உலகியலறிவுடைய உவந்த உள்ளத்தர் ; பந்து பரிபாலனத்தில் இயல்பான அன்பு பூண்டொழுகும் அந்தணச் சிரேட்டர் ; அருமறை யுச்சியுள் ஆதரித்தோதும் அரும்பிரமம் திருமகளோடு வருந்திருமால் என்று மறைமுடித் தேசிகஞர் அருளிச் செய்தபடி பொன்னருளோடும் அப் பூமகளோடும்

புகழ நிற்கும் சிங்கவேள் மாலோலன் மாணடி தொழுதேத்தும் மாசில் மனந்தெளி முனிவராயும், முக்கோற்பகவரில் முதல்வராயு முள்ள ஸ்ரீ அழகிய சிங்கரின் திருவடிகளை வாழ்த்தும் நல்லன்பர் கட்கு நற்பூஷணமாய் விளங்கிய நன்மையோன் ; தூத்துக்குடியில் பர்மாஷெல் ஏஜண்டாகத் திகழ்ந்த சீரியர். இவரது இல்லக் கிழத்தி அருந்ததியனைய **அலமேலு அம்மையார்.** இவ்விருவரும் கருத்தொருமித்து நடாத்திய இல்லறமே நல்லறம். ஸ்ரீநிவாஸய்யங் கார் ஸ்வாமி அடியேனது தந்தையாரின் உண்மையான பந்து மித்திரர். இவ்வன்பரது ஞாபகார்த்த வெளியீடே இப் "பூங் **கோதை மாலை".**

இம் மாலைப்பணியிலெம்மை யேவி, நற்றமிழ் நற்றெண்டாற் றப் பூரண உதவி புரிந்து, தங்களது வள்ளற்றிறத்தை நாடறிய நல்கிய அந்த ஸ்வாமியின் இருமணிப் புதல்வர்களான **ஸ்ரீ.பி. எஸ். கிருஷ்ணய்யங்காரும், பி. எஸ். நாராயணய்யங்காரும்,** அவர்களது பந்து மித்திரர்கள் அனைவரும் ஸ்ரீ **ஆண்டாளின்** திருவருளை மேன்மேலும் பெற்றின்புறுமாறு அன்னவளடி பணிந் தேத்துவோம்.

நாளது நந்தனவாண்டு ஆடித்திங்கள் 11௳ (26-7-52) சனிக் கிழமை ஸ்ரீவில்லிபுத்தூரில் திருவாடிப்பூர மஹோத்ஸவத்தன்று முற்பகல் திருத்தேரில் ஸ்ரீ ஆண்டாள் ஸேவையை உடனிருந்து அநுபவிக்கச் செய்தும், அன்று சாயுங்காலம் மதுரை ஸ்ரீ மதன கோபால ஸ்வாமி ஸந்நிதியில் திருவாடிப்பூர உத்ஸவத்தை உபய தாராகவிருந்து நடத்திவைத்து அடியேனைக்கொண்டு "பூங் **கோதை வைபவம்"** எனும் விஷயம் பற்றி உபந்யஸிக்கச் செய் தும் ஸ்ரீ ஆண்டாளின் திவ்யாநுக்ரஹத்திற்குப் பூரண பாத்திர ராகி விளங்கும் மேற்குறித்த ஸந்நிதித் தெருவிலேயே வஸித்து வரும் ஏஷியன் அஷ்யூரன்ஸ் மதுரை பிராஞ்சு மானேஜர் **ஸ்ரீமான் எஸ். ஆர். ஸ்ரீநிவாஸய்யங்காரவர்களின்** நல்லெண் ணமே அதற்கடுத்த ஆவணித்திங்கள் திருப்பூரத் திருநாளாகிய இன்று "**பூங்கோதை மாலை**" என்ற திருநாமத்தோடு வெளிவர வுதவியது எனில் அது மிகையாகாது. மேலும், தேவப் பெரு மாளும் பெருந்தேவித்தாயாருமாகிய திவ்ய தம்பதிகளிடம் ஸ்வாமி

தேசிகன் (நிஜ) பரத்தை ஸமர்ப்பித்து நிர்ப்பரரானவர் வேதங்களால் கவியென்று புகழப்படுபவரும் கீதை பாடியவருமான பெருமாளுக்கு அத்புதமான பாமாலை கொடுத்தவளுமான கோதையை அம்ருதவாக்கால் துதிக்கவேண்டி "ஸ்ரீ விஷ்ணுசித்தருடைய குலமென்னும் நந்தனத் தோட்டத்தில் (தோன்றிய) கற்பகக்கொடியும், ஸ்ரீரங்கராஜன் என்னும் ஹரிசந்தன கற்பக விருக்ஷத்தை அணைவதால் (மணம்புரிவதால்) பார்க்கத்தக்கவளாயும், அடிமையின் வடிவேயானவளாயும் (ஸாக்ஷாத் பூமிதேவியாயும்) கருணையினால் மற்றோர் லக்ஷ்மீதேவி போன்றவளுமான கோதையை (வாக்கையளிக்கும் தேவியை) புகலொன்றில்லாவடியேன் சரணம் பணிகிறேன்" என்ற கருத்துள்ள முதல் சுலோகத்தை அமைத்துள்ளார் கோதா ஸ்துதியில். "கோதாமநந்ய சரண: சரணம் ப்ரபத்யே" என்பதில் 'கோதா' என்கிற திருநாமத்தைச் சொல்லி சரணவரணம் செய்வதாலே துதிக்க ஸாமக்ரியான ஓர் அத்புத கவிதா சக்திக்காக கவிப்பெண்ணான கோதையைச் சரணம் புகுகிறார் என்பது சூசிதம். "அருளாளர் மாலை" (36) யை யடுத்து "பூங்கோதை மாலை"யைப் பொருந்தவைத்த ஸ்ரீ பெருந்தேவீ நாயிகா ஸமேத ஸ்ரீ தேவாதிராஜஸ்வாமியின் பேரருளை யாரே முற்றும் உணரவல்லார்?

அண்டர்திரு வாய்ப்பாடி யாயர்தரு மங்கைமா
ரவனிபுகழ் வில்லிபுத்தூ
ரதனுள்வாழ் மங்கைமா ராகநப் பின்னைதா
னுமென்ப துண்மையாகக்
கொண்டதோர் குறியினொடு வடபெருங் கோயிலார்
கோயிலது நந்தகோபன்
குலவியுண் மகிழ்கொடிரு மாளிகைய தாகக்
குறித்ததிற் புண்டரீகக்
கண்டுயிலும் வடபெருங் கோயிலார் தனதருட்
காந்தனா கவு மனத்துட்
கருதியிடை மொழியுமிடை நடையுமிடை யுடையினொடு
கைக்கொண்டு கருணைகூரத்

தெண்டிரைவ ளாகத்து மல்லிநாட் டுள்வரு
திருப்பாவை பாடினார்தஞ்
செம்பொனெண் கிண்கிணிச் சரணாரவிந்தமென்
சென்னியிற் சூடினேனே.

—(ஸ்ரீ ஆண்டாள் பிள்ளைத்தமிழ், பழிச்சினர்ப் பரவல் 12.)

வாழ்க தூப்புல்வள்ளல்!
வாழ்க பழமொழி!

பொங்கும் மங்கலம்
எங்குந் தங்குக.

ஸ்ரீரங்கவிலாசம்,
அம்பத்தூர்,
22-8-1952.

ப. ரெ. திருமலை அய்யங்கார்,
காரியதரிசி.

ஸ்ரீ:

கோதாஸ்துதி.

ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய: கவிதார்க்கிக கேஸரீ,
வேதாந்தாசார்யவர்யோ மே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி.

உத்தம ஞானச் செல்வ னுயர்மறை முடிக ளுக்கு
வித்தகப் பொருளு ணர்த்து மேன்மையன் வேங்க டேசன்
எத்திறக் கவிஞ ருக்கு மேதுவா தியர்க்கு மேறு
நித்தமு மிடைவி டாதெ னெஞ்சினிற் றிகழ்க நின்றே.

[உத்தம ஞான ஸம்பத்தையுடையவரும், வேதாந்தங்களுக்கு சாஸ்த்ரோக்தமான பொருளுரைப்பதில் பிரஸித்தி பெற்றவரும், திருவேங்கடநாதன் என்னும் திருநாமத்தை வகிப்பவரும், கவனம் பண்ணுபவர், ஹேதுவாதம் செய்பவர் இவர்கள் எத்திறமையோ ராயினும் அவர்களுக்கெல்லாம் சிங்கம் போன்றவருமான நம் தூப்புல் வேதாந்த தேசிகன் அடியேன் மனத்திலே எப்பொழுதும் வீற்றிருக்கக் கடவர்.]

ஸ்ரீவிஷ்ணுசித்த குலநந்தன கல்பவல்லீம்
ஸ்ரீரங்கராஜ ஹரிசந்தன யோக த்ருச்யாம்,
ஸாக்ஷாத்க்ஷமாம் கருணயா கமலாமிவாந்யாம்
கோதாமநந்யசரண: சரணம் ப்ரபத்யே. (1)

1. சீருலவும் விண்டுசித்த னென்னும் வேயர்
திருக்குலமா நந்தவனந் திகழ்பூங் கற்ப
தாருவளர் கொடியாகி யரங்க நாத
சாமியரி சந்தனத்திற் சார்த லானல்
ஏருலவிப் பொறுமையினிற் பூமா தாகி
யினியவரு ளதனின்மற்றோர் திருவு மான
தாருலவுங் கோதைதனை யன்றி மற்றோர்
சரணறியேன் சரணடைந்து தரிசித் தேனே. (1)

2. குருவரங்கொள் பட்டர்பிரான் குலமெனுநந் தனத்தருவின்
கொடியா யென்றுந்
திருவரங்கத் தனியரசி னருகுறையுங் குணமணியைச்
செவ்வி வாய்ந்த
வுருவதனிற் பூமகளைப் பொறுமையினிற் புவிமகளை
யொப்பாள் தன்னை
மருவளருங் குழலாளைக் கோதைதனைச் சரணுக
வணங்கி வாழ்வாம். (2)

3. பட்டர்பிரான் குலமென்னும் பசுங்காவின் றருக்கொடியாய்
இட்டமுறுந் திருவரங்க ரிடத்துறையுங் குணமணியாய்க்
கட்டழகிற் பொறுமையினிற் கமலையொடு மண்மகளாய்
மட்டவிழுங் குழலாளைச் சரணுக வணங்கிடுவாம். (3)

4. குருவா கியபட்டர் கோன்குல மான கொழும்பொழிலின்
றருவேறும் பூங்கொடி தானு யரங்கர் தமக் குகந்த
மருவாய்ப் பொறையினின் மண்மக ளாகிய வனப்பிலுயர்
திருவான கோதை தனைச்சர ணுகதி செய்தனனே. (4)

5. பட்டர்பிரா னென்னும் படப்பையருங் கற்பகத்தின்
இட்டு வளர்கொடியா யிந்திரையாய்க்—கட்டழகின்
மண்டலமாய் வண்பொறையின் மாலுக்கே மாலளிக்குந்
தண்டமிழ்செய் கோதாய் சரண். (5)

6. திருவளர் முகுந்த நந்தன னினமாந்
தேம்பொழிற் கற்பகக் கொடியைக்
குருவள ரரங்கத் தரசெனுந் தருவிற்
குலவலாற் காண்டகை யாளை
யுருவளர் பொறையை யருளினுற் பிரிதோ
ரொண்மலர் மடந்தை போன் றுளாளை
மருவளர் குழற்பூங் கோதையைப் புகலோர்
மற்றிலேன் புகல்புகு கிறேனுல். (6)

[பகவத் பக்தி, வைராக்கியம் முதலிய அநேக கல்யாண குணங்களும், கல்வியறி வொழுக்கமென்னும் செல்வமும் நிறைந்து ஸ்ரீ விஷ்ணுசித்தர் என்னும் பிரஸித்திபெற்ற பெரியாழ்வாரது திருவமிசமாகிய நந்தன வனத்திற்குக் கற்பகக் கொடி

103686

போன்றவளும், திருவரங்க மன்னனாகிய அரிசந்தனமெனும் தருவின் சேர்க்கையால் சேவிக்கத் தகுந்த பேரழகு உடையவளும், பொறுமையே உருவெடுத்து வந்தாற் போன்றவளும், பூமிப் பிராட்டியின் பூர்ணவதாரமாயிருப்பவளும், கருணையின் மிகுதி யால் மற்றோர் அலர்மேன் மங்கையை யனையவளுமான புரிமளம் விருத்தியடைகின்ற திருக்குழற் கற்றையினையுமுடைய பூங் கோதை யென்னும் சூடிக்கொடுத்த நாய்ச்சியாரைப் புகலொன் றில்லா வடியேன் சரணமாக அடைகின்றேன்.]

வைதேசிக: ச்ருதிகிரா மபிபூய ஸீநாம்
வர்ணேஷு மாதி மஹிமா நஹி மாத்ருசாம்தே,
இத்தம் விதந்தமபி மாம் ஸஹஸைவ கோதே
மௌந த்ருஹோ முகரயந்தி குணாஸ்த்வதீயா:.(2)

7. மணியறுகான் முரல்பசுந்தண் காவு சூழ்ந்த
மல்லிநா டாளுமொரு மணியே யுன்றன்
றனிவறுசீ ரெடுத்தோதற் கூம னகுந்
தமியேற்குன் கடைக்கணருள் சார்ந்தன் றேபல்
அணியழகு தகுமோனை யெதுகை தண்மை
யமுதமெனுஞ் சுவையினிமை யான வோசை
பணிமருவ விசைமருவும் பாடல் பாடும்
பாக்கியம்பெற் றனனூன்றிப் பார்க்குங் காலே. (1)

8. காமரு பனுவன் மாலைக் கற்பக மனைய கோதாய்
மாமறை வழுத்து நின்சீர் மான்மிய மனைத்து மோதற்
கூமனாய் நின்ற வென்னை யுன்னருட் குணங்களன்றோ
பூமிசைப் புலவர் போற்றப் புகன்றிடப் புரிந்தவன்றே. (2)

9. நல்லார் புகழ்தரு நான்மறை யாலு நவிற்றருஞ்சீ
ரெல்லா மிசைத்தற் கொருமூகை யாகி யிருந்தவெனைப்
பல்லார் புகழும் படிபாடச் செய்ததுன் பார்வையன்றோ
செல்லார் பொழிற்றிரு வில்லிபுத் தூர்வந்த செந்திருவே. (3)

10. கோதற்ற செந்தமிழ்தேர் கோதாயுன் சீரனைத்தும்
ஓதற்கு மூங்கையனா யுற்றவெனைச்—சீதத்
தொடைக்கவிதை பாடச் சுரந்தது நின்செய்ய
கடைக்கணரு ளன்றோ காண். (4)

11. கோதை நின்புகழ் கூறுமா
றேதி லூமனி னெய்தனைத்
தீதி லாவருள் செய்ததுன்
காத ளாவிய கண்களே. (5)

12. அளவியின் மறைவாக் கிற்குமெட் டருநின்
னரும்பெறற் பெருமையென் னனோர்தன்
கிளவியிற் கிளக்குந் தகையதன் றன்றே
கேழ்கிளர் கோதையே யிங்ஙன்
உளவிய லுணரு மென்னையு முடனே
யோதுமோ னப்பகை யாகும்
வளவிய மகிமை வாயுநின் குணங்கள்
வாய்முழங் குவித்திடு மன்றே. (6)

[ஒளிமிளிர் கோதையே! எண்ணருஞ் சுருதிவாக்கியங்களுக்கும் துதிக்க முடியாதபடி எட்டாத தூரத்திலிருக்கிற உன்னுடைய மகிமையானது அடியேனை யனைய அற்ப அறிவுடையோரது தோத்திரத்தில் அடங்காததே. பேசாமலிருப்பதே உசிதமென்று இவ்வாறு நன்றாய் அறிந்து வாயடங்கியிருக்கும் அடியேனையும் அனைவரும் கொண்டாடும்படியான மௌந விரோதிகளான வாத்ஸல்யம் முதலான உமது திருக்கல்யாண குணங்கள் என் மௌநத்தை உதறச் செய்து அடியேனை வாய் திறக்கச் செய்கின்றன.]

த்வத்ப்ரேயஸ: ச்ரவணயோ ரம்ருதாய மாநாம்
துல்யாம் த்வதீயமணி நூபுர சிஞ்சிதாநாம்,
கோதே த்வமேவ ஜநநி த்வதபிஷ்டவார்ஹாம்
வாசம் ப்ரஸந்ந மதுராம் மம ஸம்விதேஹி. (3)

13. மென்னடைய செந்நிறக்கா லன்னம் பாடி
விளையாடும் புனற்றுறைக்கா வேரி சூழ
மன்னரங்கன் செவிக்கமுத மழையே போல
மதுரமுற வொலித்திடுநின் மலர்த்தாள் வேய்ந்த
நன்னரெழிற் சிலம்பின்மணி நாத மென்ன
நலனழகு கெம்பீர நடைகண் மேவி
வன்னமுறு நினதுதுதிக் கேற்ற தாய
வாக்கருள்பூங் கோதையெனு மயிலன் னளே. (1)

14. திருவரங் கேச ஞர்தஞ் செவிக்கமு தான வோசை
மருவுநின் மலர்த்தா ளம்பொன் மணிச்சிலம் பாங்கு
[வன்னந்
தருமெழின் மதுரந் தண்மை சார்ந்துநின் றகைமைக்
[கேற்ற
வருணணி வாக்கே யீவா யரும்பெறற் கோதை யன்னே. (2)

15. தேவர் புகழுந் திருவரங் கேசன் செவிக்கமுதா
யோவறு மோசைசெ யுன்றுட் சிலம்பென வோங்கெழிற்சீர்
பாவறு நாதம் பயில்வாக்குண் டாகும் படியருள்வாய்
கோவளர் வில்லிபுத் தூர்க்கோதை சூடிக் கொடுத்தவளே.
(3)

16. கண்ணன் செவிக்கினிமை காட்டுனது காற்சிலம்பின்
பண்ணமையு மோசையினிற் பல்லணிகொண்—டெண்
சீரெலா மோதவருள் செய்வாய் திருக்கோதை [ணறுநின்
யேருலா மின்னே யெனக்கு. (4)

17. உன்பெருங் காதற் காதலன் காதிற்
குயரமு தினையனே யதுவும்
மின்பொழி நின்கா லணிமணிச் சிலம்பின்
மேதகு சிலம்பினின் னிசைத்தும்
இன்பொடு தெளிவு மேய்ந்தது முன்ற
னின்றுதி யதற்கியைந் ததுமாம்
அன்புறு வாக்கை யடியனேற் கருள்க
வன்னையே கோதையே நீயே. (5)

[வாக்கருளும் கோதையே! அன்னையே! உமது ஒளியை வீசுகின்ற தேவரீர் திருவடிகளில் அணிந்த மணிச் சிலம்பின் மேதகு தொனியைப்போல இன்னிசையுடையதும், உமது பேரன்பு பூணும் திருவரங்கச் செல்வனுரது திருச் செவிகளுக்கு அமுதம் போன்றதும், லளித பதங்களால் அமைந்து கேட்பவர்களுக்கு இனிமையாயும் விரைவில் பொருளை உணர்த்தக் கூடியதாயுள்ள தாயும், தேவரீரைத் துதிக்கத் தகுதியானதுமாகிய அன்புறு வாக்கை அடியேற்கு அருளல் வேண்டும்.]

க்ருஷ்ணுந்வயேந தததீம் யமுநாநுபாவம்
தீர்த்தைர் யதாவ தவகாஹ்ய ஸரஸ்வதீம் தே,
கோதே விகஸ்வரதியாம் பவதீகடாக்ஷாத்
வாசஸ் ஸ்புரந்தி மகரந்த முச: கவீநாம். (4)

18. விடப்பணியி னடனமிடுங் கரிய கோல
மெய்ப்பரம னுடலினுல் வெய்யோ னீன்ற
தடக்கருங்கட் டிருநிகரு னமுத தாரைச்
சரச்சுவதி குருமுகமாய்த் தான்கொண் டாடிக்
கடிக்குவளை புரையுனது கடைக்க ணேக்காற்
கனிந்துநலந் தருமினிய கவிபெய் வாரால்
சுடர்க்கொடிபோற் றுளசிவனந் தோன்றுந் தோகாய்
சுரும்பிமிரும் பரிமளப்பூந் தொடையன் னளே. (1)

19. நந்தன் மதலை யாடலினுல் யமுனை நிகரு நினதுமறை
யந்த மென்னும் வாணிவழி யறிந்தே யாடு மறிவருக்குச்
சந்த மதுர வாக்கமையுந் தகையுன் கடைக்கண் பார்வை
[யன்றே
கந்த மலர்பூம் பொழிற்புதுவைக் கனியே யருட்பூங்
[கற்பகமே. (2)

20. காமரு கோவல னுளுநி னுடலிற் காமுறலால்
யாமுனை நேருநின் வாணியை நூன்முறை யாடல்
[செய்தோர்
தோமற நின்றுதி சொல்லுவ ரான்மதி தோய்குடுமி
மாமதில் சூழ்வில்லி புத்தூ ருறையு மணிவிளக்கே. (3)

21. யாதவர்கோ னுடலினுன் யாமுனையை நேருனது
நாதவிசை வாணிதனை நன்முறையா - யோதியளை ந்
தாடுவோர் கோதா யதிமதுர நாற்கவிகள்
பாடுவா ராவர்சுயம் பா. (4)

22. யாதவர் தலைவ னன்பினு டலினுல்
யமுனையி னியல்பினை வகிக்குஞ்
சோதியே நினது சரச்சுவ தியினைத்
துறையினுன் முறையினு லாடி

மேதகு முணர்வேய் கவிஞரின் வாக்கு
மேவுநின் கடைக்கணேக் கதனுற்
போதவு மதுர மாகிய மதுவைப்
பொழிவன வாய்விளங் கிடுமால். (5)

[வாக்கன்னய்! யதுகுலாதிபதியான கண்ணபிரானுடைய சம்பந்தத்திஞல் காளிந்தி எவ்வாறு தூய்மையையும் மேன்மை யையும் அடைந்திருக்கின்றதோ அதுபோல கண்ணன் விஷய மாகப் பாடப் பெற்றிருப்பதால் சிறப்படைந்துள்ள தேவரீர் திருவாய் மலர்ந்தருளிய திருப்பாவை முதலிய திவ்விய பிரபந்தங் களைக் குருமுகமாக முறையில் ஓதியுணர்ந்து தேவரீர் கடைக்கண் நோக்கத்தாலே தெளிவையுடைய ஞானவான்களாகிய கவிகள் இனிய மதுர வாக்கை யுடையவர்களாக விளங்குகின்றனர். (கண்ணன் அன்போடு கோபிகைகளுடன் நீர் விளையாட்டைச் செய்தருளியதனுலே யமுனைபோல பாதகம் போக்கிப் பரன்பத முதவும் பான்மையைக் கொண்டிருக்கும் சரச்சுவதி நதியை இறங்கு துறைவழியே ஸ்நானவிதியிற் கூறியாங்கு நாடி நீராடுப வர்க்கு அதனுலே சிலாக்கியமான ஞானம் பொருந்திய மதுரமாகக் கவிபாடும் வல்லமை யுண்டாகும்.)]

அஸ்மாத்ருசா மபக்ருதௌ சிரதீக்ஷிதாநாம்
அஹ்நாய தேவி தயதே யதஸௌ முகுந்த: ,
தந்நிச்சிதம் நியமிதஸ்தவ மௌளிதாம்நா
தந்த்ரீ நிநாத மதுரைச்ச கிராம் நிகும்பை: . (5)

23. வேலநெடுங் கடற்றுயிலுங் கரிய கோல
மேகமொப்பா னெனைப்போலும் வெய்யோர் தம்பாற்
சாலநிழ லெனக்கருணை பொழியுந் தன்மை
தனிமதுரத் தமிழ்த்தொடையல் தன்னல் யாத்த
மாலையினு நெறிந்திருண்டு வடித்த கூந்தன்
மாலையினும் பிணிப்புண்ட மாலை யன்றோ
ஆலையெழிற் கரும்பிரசம் பழனம் பாயு
மணிமல்லி நாட்டினுக்கோ ரரசா வாளே. (1)

24. பரம முதல்வ னெனைப்போலும் படுபா வியருக் கருடரலுன்
வரமன் னியபா மாலையினும் வளருங் குழற்பூ மாலையினும்

விரவு மருளாற் பிணிப்புண்ட விதத்தா லென்பர்
[வேற்றடங்கட்
புருவ மயிலே புதுவைநகர்ப் பொன்னே கோதைப்
[பொற்கொடியே. (2)

25. என்போலும் பாவியர்க் கெல்லா மிரங்குத லெம்பெருமான்
மின்போலு நுண்ணிடை வேல்போலுங் கூர்விழி
[மெல்லியனின்
பொன்போலு நல்லெழிற் பாமா லையினும் புனைகுழற்பூ
மென்போ திநுமுள வேட்கையென் றேதுவர்
[மேலவரே. (3)

26. நாறுமலர்க் கோதாயு னதைனெனைப் போலறத்தி
னறறியா வாதர்க் கருள்புரிதல் - தேற நின்பா
மாலையினும் வண்குழல்சேர்வாடற் பழஞ்சருகு
மாலையினுங் கொண்ட மயக்கு. (4)

27. அன்னையே பொல்லாங் கெவர்க்குமெஞ் ஞான்று
மாற்றிடு மறிவிலி யாகும்
என்னையே யனையார்க் கிவ்விறை விரைவில்
இன்னருள் செயலெதி லதுநின்
தென்னையேய் குழலி லிசைதொடை யலினும்
திவவுயா ழிசையினு மினிய
பொன்னையேய் தமிழி லிசைதொடை யலினும்
புரிந்துகட் டுண்ணலாற் றிடனே. (5)

[உலகிலுள்ள ஜீவன்களுக்குச் சிறிதும் நன்றிசெய்ய அறியாது பொல்லாங்கையே ஆற்றிடும் அடியேனைப் போன்றவர்களிடத்தில் இத் திருவரங்க மன்னரை நிக்கிரகிக்காமல் இன்னருள் சுரப்பதற்குக் காரணம் தேவரீர் திருக்குழற்கற்றையிற் சூடிக் கொடுத்த பூமாலையில் அவர் வைத்திருக்கும் பிரியத்தாலும், பாபத்தாற் பிணைக்கப்பட்டு வருந்துகின்ற அன்பர்களிடம் தேவரீர் கொண்டுள்ள அருண்மையால் பகவானிடத்தில் எடுத்து இயம்பும் இனிய மொழியிலும் அவர் கட்டுண்ணலால் என்பது நிச்சயம்.]

சோணாதரேபி குசயோரபி துங்கபத்ரா
வாசாம் ப்ரவாஹ விபவேபி ஸரஸ்வதீ த்வம்,
அப்ராக்ருதைரபி ரஸைர்விரஜா(:) ஸ்வபாவாத்
கோதாபி தேவி கமிதுர்நநு நர்மதாஸி. (6)

28. கருணையொரு வடிவெடுத்த காட்சி போலக்
காதுவரை நீண்டிலகுங் கண்ணு யின்பம்
பருகதரந் தனிற்சோணை நதியாய்த் துங்க
பத்திரையாய்ப் பருத்தபயோ தரத்தூற் பாரின்
மருவியநீர்ப் பிரவாக வாக்கிற் செல்வ
வாணியா யவித்தையிலா வகையின் மன்னும்
விரசையாய்க் கோதையா யாழி கொண்ட
விமலனுக்கு நருமதையாய் விளங்கு வாயே. (1)

29. அன்னையே கோதை யாகி யதரத்திற் சோணை யாகிப்
பன்னருந் தனத்தாற் றுங்க பத்திரை யாகி வாக்கான்
மன்னரும் வாணி யாய்நம் மானுக்கு விரசை யாகி
நன்னர்சால் தரளஞ் சிந்து நருமதா நதியும்
[போன்ருய். (2)

30. சேயிதழ்ச் சோணையுஞ் செம்மாந் தெழுந்த திரண்
[முலையாம்
பாயும் புனற்றுங்க பத்திரை தன்னையும் பாப்பெருக்கான்
மேயவவ் வாணியு மெய்யுரை யாலவ் விரசையும்போ
லாயு நருமதை கோதையு மாயினை யச்சுதற்கே. (3)

31. சுத்தவிழ்ச் சோணையினுற் றெய்யிற் றனத்துங்க
பத்திரையாய் வாணிநிறை பாணியாய் - முத்தி
விரசையாய்க் கோதையாய் விண்டுவுக்கே யானுய்
சரசமுறு நர்மதையாய்ச் சார்ந்து. (4)

32. இதழதிற் சோணை யாயுநீ நகிலத்
திணையுறுங் கபத்திரை யாயும்
சிதகறு கோவின் பெருக்கெனும் பெருக்கிற்
சிறந்தசீர்ச் சரச்சுவதி யாயும்

விதலைசெய் பகுதி தோய்விலாச் சுவையில்
விரசையா யும்மியல் பானே
முதல்வியே கோதை யாயுநர் மதையா
முதல்வனுக் காகுகின் றுயால். (5)

[தேவியாரே! தேவரீர் சோணைநதியா யிருந்தும் துங்கபத்திரா நதியாகவும், சரச்சுவதி நதியா யிருந்தாலும் விரஜை நதியாகவும், கோதாவரியா யிருந்தாலும் நருமதை என்னும் நதியாகவும் ஆகிறீர். எவ்வாறெனில், திருப்பவளத்தில் செந்நிற முடையவளாயும், திருமுலைத்தடங்களில் பெருமையும் பேரழகும் உடையவளாயும், வாக்கின் பெருக்காகிய வைபவத்தில் கலைமகளாயும், பிரகிருதி சம்பந்தமில்லாத பகவத் பக்திரசத்தினுல் இராஜசதாமதகுணங்க ளற்றவளாயும், இயல்பிலே கோதையாயிருந்தும் பகவானுக்கு விளையாட்டுக் காரணபூதையாய் நின்று இன்பத்தை விளைப்பவராகுகின்றீர்.]

வல்மீகத: ச்ரவணதோ வஸுதாத்மநஸ்தே
ஜாதோ பபூவ ஸமுநி: கவிஸார்மபௌம: ,
கோதே கிமத்புதமிதம் யதமீ ஸ்வதந்தே
வக்த்ராரவிந்த மகரந்த நிபா: ப்ரபந்தா: . (7)

33. பூமகடன் கலையாகத் துளவம் பூத்த
பொற்கொடிநின் செவியிலொரு புலவன் போந்து
காமருவு சுரகணங்கள் களிப்ப வாதி
காவியமொன் றியம்பியருங் காட்சி பெற்றுன்
மாமதுரங் கனிந்தொழுகத் துறைப்பா டேய்ந்து
வளருமிளந் தமிழ்மதுவின் மால்வைத் தாரக்
கோமுதல்வன் றனைப்புரிந்தாய் கோதா யன்பர்
குறைமுடித்தா யிதுவியப்போ கூறுங் காலே. (1)

34. தேவியற் கோதா யுன்றன் செவியில்வந் தொருவ ஞதி
காவிய மியற்றி நுங்கோன் களிப்புறக் காட்டி னுல்
நீவியந் திடுமா சொற்ற நிரையிசைக் கவியா லின்ப
மேவிய காதல் கூரு மென்பதோர் வியப்ப தாமோ. (2)

35. புவிமா தெனப்புகல் நின்செவி வாய்வந்தோர் புங்கவன்முன்
கவிதா மணிகளை யுங்கோ னருள்பெறக் காட்டினனுல்
சவிதா வனைய தமிழாலம் மாலுளந் தங்கவைத்தாய்
குவிதாமக் கொங்கைக் குயிலே வியப்பென்னை
[கூறுவதே. (3)

36. புவிமகளா நின்செவியிற் போந்தமுனி நுங்கோன்
கவிமகனுய் வாழ்ந்து களித்தான் - சவிமருவு
நீதா னியற்றுகவி நேசமுற மாலைவைத்தாய்
கோதாய் வியப்பென்னே கூறு. (4)

37. புவியுரு வாமுன் செவியெனப் புகலும்
புற்றினின் றுற்றவத் தவத்தோன்
கவிஞருக் கரசர்க் கரசெனப் புகழுங்
கௌரவ மெய்தினு னெனினின்
செவியதாந் திருவாய் மலரினில் வருமித்
தேனுறழ் தருதிரு மொழிகள்
அவிருமன் பருக்கின் பளிப்பவா மென்ப
தன்னையே யென்னையே வியப்பே. (5)

[தாயே ! பூதேவியின் உருவமாகிற தேவரீரது திருக் காதுகளென்று சொல்லப் பெறுகிற புற்றினின்றும் தோன்றிய அந்த வான்மீகி மகாமுனிவன் கவிசார்வ பௌமனெனக் கொண்டாடப் படுங் கௌரவத்தைப் பெற்ருனென்ருல், சாக்ஷாது தேவரீருடைய திருமுகத் தாமரையினின்றும் பெறுகுகிற தேனுக்கொப்பான இந்தத் திருப்பாவை முதலிய திவ்வியப்ரபந்தங்கள் பகவானுலும் பாகவதர்களாலும் நன்கு அநுபவிக்கப்பெற்று கொண்டாடப் படுவது என்ன அற்புதம் !]

போக்தும் தவ ப்ரியதமம் பவதீவ கோதே
பக்திம் நிஜாம் ப்ரணயபாவநயா க்ருணந்த :,
உச்சாவசைர் விரஹஸங்கம ஜைருதந்தை :
ச்ருங்காரயந்தி ஹ்ருதயம் குரவஸ்த்வதீயா : (8)

38. ஆராத பெருங்காதல் வெள்ளம் பொங்கி
யகப்பொருளின் றுறைதழுவி யன்பு மேவி
வாராத பெருஞ்செல்வ மருவி ஞர்போன்
மாலாகி யனவரத மகிழ்ச்சி கூர்ந்தார்

காராறுங் குழற்கோதாய் பெண்மை மேவிக்
காமுறநீ பாடியவக் கவிக டேர்ந்து
நீராகி யுருகுமெனல் வியப்பொன் றில்லை
நீலமுகி லாகுமெனு நிறத்தி ளுனே. (1)

39. அருள்தருங் குணத்தா லான்ருே
ரகப்பொருட் டுறையி ளுடிக்
கருமுகில் வண்ணன் றன்னைக்
கலந்தனர் கவிக ளாலே
மருமலர்க் கோதாய் பெண்மை
மருவுநின் வாக்கின் மாலா
யுருகிடா துறையுங் கொல்லோ
வுரைக்குங்கா லருமை யுண்டோ. (2)

40. மின்போலு நுண்ணிடைக் கோதாயுன்
காதலன் மேல்விழைந்து
நின்போற் புலந்து நினைவினிற்
கூடிய நேயமெல்லாம்
பொன்போற் கவியிற் புனைந்தளைந்
தாரது போலவன்பா
லன்பா லளைதரு நின்பாற்
புரித லருமையென்னே. (3)

41. ஆழ்வார்க ளுங்கோ னருளழகிற் பெண்மையவாய்
வாழ்வா ரகங்கனிந்து மால்பெருகி—நாழோரா
மாலாகிக் கோதாயுன் வாக்குமது வுண்டுநின்மான்
மேலாத லென்னோ வியப்பு. (4)

42. அனுபவித் திடநின் னன்பனை யுனைப்போ
லன்னையே யுன்னுடை முனோர்தம்
புனிதபத் தியினை யிரத்திய தாகப்
புத்திசெய் துற்றிடும் பிரிவில்
துனிதவிர் புணர்விற் றேன்றிய வற்றைச்
சொலும்பல துறைத்தொடர் புகளால்
மனதினை யின்பச் சுவைமய மாக
வனைதரு கின்றன ரன்றே. (5)

[அன்னையே! தேவரீர் அருள்பெற்றவர்களான ஆழ்வாராசாரியர்கள் தேவரீருடைய அன்பனுன அழகிய மணவாளனைத் தேவரீரைப்போல் இன்பம் நுகரவேண்டுமென்று தங்கள் புனிதபத்தியினைக் கணவனிடத்தில் காதலிக்குள்ள அன்புபோல வைத்துக்கொண்டு அநேக விதங்களான பிரிதல், புணர்தல் முதலியவற்றால் உண்டாகும் கோவைத்துறைகளால் சிற்றின்ப ரசம் உடையதுபோலச் செய்கின்றனர்.]

மாதஸ்ஸமுத்தி தவதீ மதி விஷ்ணுசித்தம்
விச்வோபஜீவ்ய மம்ருதம் வசஸா துஹாநாம்,
தாபச்சிதம் ஹிமருசேரிவ மூர்த்தி மந்யாம்
ஸந்த: பயோதிதுஹிதுஸ் ஸஹஜாம் விதுஸ்த்வாம். (9)

43. வேதவே தாந்தமெலாம் விளக்குஞ் சோதி
விண்டுசித்த மால்பெறவே விளங்க லானுஞ்
சாதமுறுங் கலையமுதாற் புவிமீ துள்ளோர்
தாபமெலா மகற்றுவிக்குந் தன்மையாலு
மேதினியில் வேறுமொரு மதியம் போல்வாய்
வியன்கோதை நாயகிநீ வேலைவந்த
சீதமதி யுடனுதித்த திருவி னூடுஞ்
செனித்தசகோ தரியெனவே செப்ப லாமே. (1)

44. மலைவரும் விண்டு சித்த மால்பெற வந்த தாற்றன்
கலையினுற் றுப நீக்கிக் கழித்தலாற் கருதின் மற்றோர்
தலைதரு மதியம் போலத் தயங்கெழிற் கோதாய் நீதான்
சிலைகடன் மதியோ டுற்ற திருவினுக் கிளையா ளாமே. (2)

45. மாலா கியவிண்டு சித்தனற் பாடுற வந்ததினற்
பாலார் கலையினில் வெந்தாப நீக்குறும் பண்பின்மற்றோர்
வேலா மதியிற் றிகழ்கோதை யுன்னையவ் வேலைவரும்
ஆலோ னுடன்பிறந் தாட்கிளை யாளென் றறைகுதுமே. (3)

46. மன்கலைதேர் விண்டுசித்த மால்பெறவே வந்ததினல்
மன்கலையாற் றுபமெலா மாற்றுவதால்—மென்கலையார்
மற்றோர் மதிநிகர்நீ வார்கடல்வாய் வந்தவள்பின்
புற்று ளெனவுரைப்பா மோர்ந்து. (4)

47. விண்டு சித்தமு னிவர்தர லானும்
மேவிய நிலவுல கெல்லாம்
கொண்டுவந் துய்ய நிலவிடு மமுதங்
கொடுத்திடும் வாய்மையி னுனும்
மண்டுவெப் பொழித்த லானுமற் றெருவாண்
மதிநிக ரன்னேயே நின்னேப்
பண்டுபாற் கடல்வந் தவளுடன் பிறப்பாம்
பாவையென் றறிவரா னல்லோர். (5)

[தாயே! பரமசாதுக்கள் தேவரீரைச் சந்திரனேப்போல இலக்குமியின் சகோதரி என்று கூறுகிருர்கள். அஃதெவ்வாறெனின், (i) தேவரீர் விஷ்ணுசித்தரிடத்தில் பிறந்தவர். சந்திரனும் விஷ்ணுசித்தத்திற் பிறந்தவன். (விஷ்ணுசித்தர் - பெரியாழ்வார்; விண்டுவின் மனத்தில் பிறந்தவன்; மதி என்பது மறை); (ii) தேவரீர் உலகுய்ய அமுதுக்கொப்பான இனிமை வாய்ந்த திவ்யப்ரபந்தங்களே திருவாக்கினுல் அருளிச் செய்தவர். திங்கள் உலகிலுள்ள அகில ஜீவர்கட்கும் தனது கிரணங்களால் அமுதத்தை யளிக்கிருன்; (iii) தேவரீர் கருணேயால் பாகவதர்களுடைய தாபத்திரயங்களேயும் போக்குகிறீர். மதிஉலகில் ஜீவர்கள் அடைந்த வெய்யில் முதலியவற்ருல் உண்டாகிய வெப்பத்தையெல்லாம் போக்குகிருன். பார்வைக்கும் வேறு சந்திரன் என்று சொல்லும்படியான உருவமுடையவர் தேவரீர். ஆகலான் அமுதமதனகாலத்து திருப்பாற்கடலிற் பிறந்தமையால் சந்திரன் எப்படித் திருவின் சகோதரனே அப்படியே தேவரீரும் இலக்குமியின் சகோதரியாவீர் என்மனுர் புலவர்.]

தாதஸ்து தே மதுபிதஸ் ஸ்துதி லேசவச்யாத்
கர்ணும்ருதைச் ச்ருதிசதை ரநவாப்த பூர்வம்,
த்வந் மௌளிகந்த ஸுபகாமுபஹ்ருத்ய மாலாம்
லேபே மஹத்தர பதாநுகுணம் ப்ரஸாதம். (10)

48. மங்காத தவமுனிவர் வான நாட்டு
மலரயனே முதலான வரத்தேரர் யாருந்
தங்காதல் பெறத்துதித்தற் கெட்டொ ணுதை
தாடாள னினதுதிருத் தாதை சாற்றுஞ்

சிங்காத துதிசிறிதிங் கேற்று வாழ்வு
செய்தருளல் செழுங்கோதைத் திருவே யுன்றன்
கொங்காருங் குழல்சூடிக் கொடுத்த தெய்வக்
கோதைதனை யணிதருமக் குணத்தா லன்றே. (1)

49. மலரய ஞதி வானோர் வாக்கினுக் கெட்டா மாயோன்
அலர்மணிக் கூந்தற் கோதா யசைவினின் றந்தை சாற்றுஞ்
சிலதுதிக் கிரங்கி வாழ்வு செய்தனின் செய்ய சென்னி (2)
மிலைமலர் மாலை வேய்ந்த வேட்கையால் விளைந்த தன்றே.

50. நாடிக் கவிஞர் துதித்தற்கெட் டாதனி ஞதன்சிற்சில்
பாடித் தரும்பட்டர் கோன்றனக் கேயருள் பாலித்திடல்
கோடித்துக் கோதைக் கொடியே யுனது குழற்கற்றையிற்
சூடித் தருகின்ற மாலையின் மாலெனச் சொல்லுவரே. (3)

51. மாகர் துதிக் கெட்டா மணவாள னின்றமப்ப
ஞகுமவன் பாட்டுக் கருள்புரிதல்—நாகிளம்பூஞ்
சோலைசூழ் வில்லிபுத்தூர்த் தோகாய்நீ சூடியருண்
மாலையா லன்றே மகிழ்ந்து. (4)

52. கோதைநின் கோதை விரைகமழ் நலஞர்
கோதையைக் கொண்டுபோய்க் கொடுத்துத்
தாதையோ வெனினின் றுதிசிறி தான்வ
சமாமிறை யவனிட மிருந்து
காதினுக் கமுதாந் துதிபல நூறு
களாலுமுன் னம்மடை யாத
மேதகும் பதவிக் குத்தகு தியதாம்
வியனருண் மேயின னன்றே. (5)

[நாய்ச்சியாரே! தேவரீருடைய திருத்தமப்பஞரான பெரியாழ்வாருங் கூட உமது அற்பத்துதியினுல் சர்வ சுவாதீனஞ யிருக்கிற பகவானிடத்திலிருந்து காதுகளுக்கு அமுதம்போன்ற பல நூறு துதிகளாலேயும் முன்பு அடையக் கூடாததான மகத்தர பதத்துக் கநுகுணமாகிய மேலான அநுக்கிரகத்தை தேவரீர் திருக்குழற்கற்றையிற் சூட்டி வாச மூட்டிக் கொடுத்த திருமாலையைக் கொண்டுபோய்ப் பகவானுக்குக் கொடுப்பதனுலேயே அடைந்தாரல்லவா?]

திக் தக்ஷிணாபி பரிபக்த்ரிம புண்யலப்யாத்
ஸர்வோத்தரா பவதி தேவி தவாவவதாராத்,
யத்ரைவ ரங்கபதிநா பஹுமாநபூர்வம்
நித்ராளுநாபி நியதம் நிஹிதா: கடாக்ஷா: (11)

53. நன்றிசையுந் திருவரங்க நாத னென
நம்பெருமா னீபிறந்த நன்னு டாய
தென்றிசைசெய் திருவிழியின் கடைக்க ணேக்க
மெக்காலு மெய்துதலா லிலவச் செவ்வாய்க்
குன்றிசையுந் தனமலர்ப்பூங் கோதாய் நான்காய்க்
குறித்தபயன் றருதலினுற் கூறுங் காலைத்
தென்றிசையுத் தரதிசையே யாயிற் றென்றுற்
றெரிவருநின் பெருமையெவர் செப்பற் பாலார். (1)

54. பன்னருங் கோதை நீயுற் பவித்தது பாரின் மீது
தென்னெனத் தெரிந்து நோக்கிச் சீதரன் றுயிற லானு
மன்னரும் பயன்க ளுன்கும் வருபவர்க் களித்த லானும்
அன்னபொன் றிசையே நல்லுத் தரதிசை யாயிற் றன்றே.
(2)

55. பேருர்ந்த கோதைப் பிடிநீ யுலகிற் பிறந்ததிசை
வீரு ரரங்க னருணேக் கியைதரு மேன்மையினுல்
கூறுன நாற்பயன் வேண்டிவந் தோர்க்குக் கொடுத்த
மாறுகத் தென்றிசை யுத்தர மாக மருவியதே. [லிஞ்ன் (3)

56. பொன்னேக்குங் கோதாய்நீ போந்ததிசை மாலரங்கன்
தன்னேக்க மெய்து ந் தரத்தினுன்—மன்னேக்கு
மண்ணிற் பயனளிக்கும் வண்மையினுன் மாமுனிவர்
எண்ணுத் தரதிசையா யிற்று. (4)

57. தெக்கண திக்கும் பக்குவ மாநற்
செய்கையா லேயுநின் பிறப்பால்
திக்கனைத் தினுக்கு முத்தர மாகிச்
சிறந்ததத் திகைதனி லேயே

மிக்கசீர்க் கோதா யறிதுயி லமரும்
வியனரங் கமன்னவ ஞலும்
தக்கதா கியநன் மதிப்பொடு கடைக்கண்
சந்ததம் வைத்திடப் படுமால். (5)

[தக்கசீர்க்கோதாய்! தேவரீர் திருவவதரித்த திக்குத் தென்றிசையாயினும் பயனைத்தரத் தகுதியான அநேகம் பிறவிகள் தோறும் இயற்றப்பட்ட நற்கருமங்களால் அடையத் தகுந்ததான உமது அவதாரத்தை அடைந்தமையால் எத்திசையினும் உத்தர திசையாயிற்று. (மேலானதிசை, வடதிசை). அன்றியும், என்றும் அறிதுயிலமர்ந்தருளுகின்ற அழகிய மணவாளராலே தேவரீர் திருவவதரித்த திசையென்கிற பிரியத்திஞலே சந்ததமும் எந்ததிக்கானது கடாக்ஷ வீக்ஷணத்திற்குப் பாத்திரமாக அடையப் பெற்றதோ அக்காரணத்திஞல் அத்திசை உத்தர திசையாயிற்று.]

ப்ராயேண தேவி பவதீவ்யபதேசயோகாத்
கோதாவரீ ஜகதிதம் பயஸா புநீதே,
யஸ்யாம் ஸமேத்ய ஸமயேஷு சிரம் நிவாஸாத்
பாகீரதிப்ரப்ருதயோபி பவந்தி புண்யா: (12)

58. வண்ணமுறு மணிவரன்றி வயங்குங் கோதா
வரியுனது திருப்பெயரை மேவு மாற்ருற்
புண்ணியநன் னதிகளெலாந் தன்பான் மேவப்
புகலரிய பாவமெலாம் போக்கு மன்றி
மண்ணுலகி னீராட வருவோர் கோது
மாற்றிநல னளிக்குமென வகுப்பர் நீலக்
கண்ணனைத்தன் வசமாக்குங் கரிய கோலக்
கருணைவிழிப் பெரியதனக் கனியன் ஞளே. (1)

59. மண்டலம் புகழுங் கோதா வரிநதி யுனது நாமங்
கொண்டதாற் கோதாய் வந்து குளிப்பவர் பாவ மெல்லாம்
சண்டன்மு னிருள்போ லாக்கித் தன்னில்வந் தெய்து [நன்னீர்த்
தண்டுறை நதிக ளெல்லாந் தகைபெறச் செய்யு மன்றே. (2)

60. சாதாரி நேர்மொழிக் கோதா யுனதபி தானங்கொண்ட
கோதா வரிநதி தன்பாற் குளிப்பவர் கோதனைத்தும்
பாதார விந்தம் படுநீர் முதலிய பன்னதியின்
றிதான பாவமுந் தீர்க்குமென் றேதுவர் சீரியரே. (3)

61. கோதா யுனதுபெயர் கொண்டதனு லன்றேவக்
கோதா வரிதனது கோளகற்றித் —தீதோடச்
சார்ந்தார் பவமுந் தரங்கிணியின் றன்பவமுந்
தீர்ந்தோடச் செய்யுமென்பர் தேர்ந்து. (4)

62. கோதையே கோதா வரிநின்றன் பெயரின்
கூட்டத்தி ஞலிந்த வுலகைப்
போதவும் புனலாற் புனிதம தாகப்
புரிந்திடும் புகலுமெந் நதியில்
மேதகுங் கங்கை யாதிய வாகும்
வியன்னதி பலவும்வந் துவந்தே
ஓதிடும் பருவத் துறைதலா லென்றும்
முயர்புண்ய நதிகளா யினவால். (5)

[தேவியே ! கோதாவரியென்னும் நதியானது தேவரீருடைய திருநாமசம்பந்த மாத்திரத்திலேயே தன்னுடைய தீர்த்தத்தினுலே இம் மண்ணுலகத்தைப் பரமபவித்திரமாகச் செய்கின்றது. இது மாத்திரமோ ? கங்கை, யமுனை முதலிய மகாநதிகளும் பருவ காலங்க டோறும் இக்கோதாவரி நதியில் வந்து வந்து தங்குத லாலேயே தம்மில் வந்து நீராடு கின்றவர்களை யெல்லாம் நீண்ட காலமாகப் புனிதவான்களாகச் செய்ய வல்லமை யுடையன வாயின. உலகத்தில் பாபமனைத்தையும் போக்கடிப்பதாகப் பிரஸித்தி பெற்ற கங்கை, யமுனை முதலிய நதிகளும் ஒவ்வொரு புண்யகாலங்களில், பாபிகளுடைய ஸம்ஸர்க்கத்தினுலுண்டான பாபம் போகும்வரையில் எந்த கோதாவரியில் வஸித்து பரிஸுத்தங்களாக ஆகின்றனவோ, அப்படிப்பட்ட கோதாவரி நதியும் உன் திருநாமத்தை வகித்ததினுலேயே ஜகத்தைப் பரிசுத்தப் படுத்தும் பெருமை பெற்ற தெனில் உன்னுடைய ஸர்வபாவ நத்வம் கைமுதிகந்யாயஸித்த மன்றோ !]

நாகேசயஸ் ஸுதநு பக்ஷிரத: கதம் தே
ஜாதஸ் ஸ்வயம் வரபதி: புருஷ: புராண:,
ஏவம்விதாஸ் ஸமுசிதம் ப்ரணயம் பவத்யாஸ்
ஸந்தர்சயந்தி பரிஹாஸகிரஸ் ஸகீநாம். (13)

63. சேலாலம் புரைவிழியார் சேடி மாருன்
றிருவதன நோக்கியருட் செவ்வி நுங்கோன்
ஆலால வரவணைமேற் றுயின்றா னன்றி
யரும்பறவை தனையூர்தி யாகக் கொண்டான்
பாலாய மொழிக்கோதைப் பாவாய் மூத்துப்
பழுத்துமுதிர் கிழவனையுன் பருவந் தேராய்
மாலானு யெனவசதி யாடற் கெல்லா
மட்டடங்காப் புளகூர மகிழ்செய் வாயே. (1)

64. பாம்பினிற் படுத்தான் வேகப் பறவைவா கனமாய்க்
[கொண்டான்
மேம்படு கிழவ னுனன் வேட்டநின் மகிழ்ந னென்று
தேம்படு தெரியற் கோதாய் சேடிய ரசதி யாடித்
தாம்புகல் வார்த்தைக் கெல்லாந் தனகுட னகைசெய்
[வாயே. (2)

65. கடுத்தா னிகர்விழிக் கோதாயுன் காதலன் கட்செவியிற்
படுத்தா னதன்றிப் பறவையை யூர்ந்தனன் பாரகத்தி
லடுத்தான் கிழவ னெனச்சே டியர்நகைத் தாடுமொழி
மடுத்தே செவியி லடங்கா மகிழ்ச்சியுண் மன்னுவையே.(3)

66. பணியிற் படுத்தான் பறவைதனை யூர்ந்தான்
அணியிற் றிகழ்கிழவ னன்பன்—மணியிற்பூஞ்
சேடுலவுங் கோதையெனச் சேடியர்கண் மெல்லநகைத்
தாடுமொழிக் குள்ளமகிழ் வாய். (4)

67. மல்லிநா டாளும் மெல்லிய னினக்கு
வலியரா வயிற்றுயில் பயில்வோன்
சொல்லுமா சுகமா விரதமே வியவன்
றெல்லையம் புமான்சுயம் வரத்தில்

வல்லவ ஞரு னெங்ஙனென் றென்றும்
மருவுதோ ழியர்சொலு நகைப்புப்
புல்லிய மொழிகள் நின்பெருங் காதல்
போதவுந் தருமெனல் புகலும். (5)

[மல்லி நாடாளும் மெல்லியலீர்! உமக்கு வலிய பாம்பின்மீது எப்பொழுதும் துயில் பயில்வோனும், பறவையேறிச் செல்பவனும், புராண புருஷனுமான ஒருவனை எங்ஙனம் கணவனுகத்தானே வரித்துக் கொண்டீரோ என்று உமது உயிர்த் தோழியர்கள் சொல்லும் பரிகாச மொழிகள் மிகவும் விருப்பத்தைத் தருகின்றன. அழகிய திருமேனி வாய்ந்தவளே! க்ரூரமாயும் பயங்கரமாயு மிருக்கிற பாம்பின்மேல் படுத்து உறங்குபவனை வரித்தாயே. அவன் அருகில் எவ்வாறு அணுகத்துணிவாய்? அல்பப்ராணனை உடையதும் சஞ்சலமாயுமுள்ள கருடன்மேல் ஊர்ந்து செல்பவனை வரித்த நீ அவனிடம் எப்படி ஓரிடத்திலிருந்து இல்லறம் நடத்து வாய்? யுவதியான நீ வயதறிய முடியாத கிழவனை வரித்தாயே. எப்படி இவரிடம் இன்பம் அநுபவிப்பாய்? என்பவை போன்ற உன் தோழிகளின் பரிஹாஸ மொழிகள் 'சென்றுற்குடையாம்' என்கிற ரீதியில் எந்தக் காலத்திலும் பகவானை விட்டுப் பிரியாது கைங்கர்யம் செய்கிறவராயும், நல்ல வாஸனை, ஸௌகுமார்யம், சீதளம், வைசால்யம் முதலிய அநேக படுக்கையின் குணங்க ளோடு கூடி ஆயிரம் பணமண்டலங்களையுடையவருமான ஆதி சேஷன்மேல் பள்ளிகொண்ட அநந்தசயனனை வரித்தாய் என்றும், வேதஸ்வரூபியும், அம்ருதாஹரணுதிகளினுல் ப்ரஸித்திபெற்ற வீர்யமுள்ளவருமான புள்ளரையனை வாஹநமாயுடைய ஸர்வேச் வரனை யல்லவோ நீ வரித்தாய் என்றும், புராண புருஷனுகிய ஜகத்காரணனுன நாராயணனை யன்றோ நீ வரித்தாய் என்றும், உன் அழகிற்கும் மேன்மைக்கும் தக்கவாறு உன் இச்சை அமைந்தது என்றும் காட்டுகின்றன.]

த்வத்புக்த மால்ய ஸுரபீ க்ருத சாருமௌளே:
ஹித்வா புஜாந்தரகதாமபி வைஜயந்தீம்,
பத்யுஸ் தவேச்வரி மித: ப்ரதிகாத லோலா:
பர்ஹாத பத்ர ருசிமார சயந்தி ப்ருங்கா: (14)

68. எனைத்துலகும் புகழ்கோதா யிறைவ னுகத்
தெழில்செய்வன மாலையிடை யிசையார் வண்டின்
வனத்தொகுதி நினதுகுழல் சூடித் தந்த
மாலையின்மா லாகியவன் மகுட மீதி
லினத்திஞெடுஞ் சுழன்றுநெருக் குதலா லுன்ற
னிருவிழியின் கடையருஞேக் கியைந்தோ ரம்ம
அனைத்துலகு மயிற்பீலிக் கவிகை நீழ
லரசாட்சி புரிவரென வறைவ தாமே. (1)

69. மருந்துறழ் கோதை நுங்கோன் மார்பணி மாலை நீத்துன்
கருங்குழற் கற்றை சூடிக் களைந்ததார் முடியிற் சூழ்ந்த
சுரும்பர்நி னருஞேக் குற்ருேர் தொங்கலங் கவிகை நீழல்
இருந்தர சாட்சி செய்வ ரென்பதை யுணர்த்து மாதோ. (2)

70. சுரும்பர்கள் கோதை பிரானிறங் குல்லை துறந்துமன்றற்
கருங்குழல் சூடித் தருந்தார் முடியிற் கஞன்றுசுலாய்
உரந்தரச் சூழுத னின்னரு ஞேக்க முடையவர் மண்
தரம்பயில் பீலிக் குடைநிழ லாள்வது சாற்றுமன்றே. (3)

71. வண்டினமான் மார்பின் வனமாலை கைவிட்டு
மண்டிநீ சூடியருண் மாலைமுடி—யண்டி
யடையச் சுழலுதனி னன்புடையோர் பீலிக்
குடைநிழலி லாள்தல்குறிக் கும். (4)

72. இறைவியே சிறைவண் டினந்தின முன்ற
னெழிற்குழல் புனைநனை மலரால்
நிறைதரு நறையேய் முடியினை யுடைய
நின்னிறை யின்னிற மருவி
உறையென நறைபெய் வைசயந் தியையு
மொருவிமீ தெழும்பொழு தொன்றிச்
சிறைகளி னறையான் மௌலிமேற் சுழன்று
செய்திடும் பிச்சநன் னிழலே. (5)

[அகிலாண்ட நாயகியாரே! அனுதினமும் தேவரீர் பூங் கோதையிற் சூடிக் கொடுத்த பூமாலையினுலே பரிபூர்ணமான பரிமளத்தையுற்ற மனேகரமான திருக்குழலையுடைய தேவரீ

ருடைய கணவனுடைய திருமார்பை அடைந்து நறைபெய் வைசயந்தியையும் விட்டு, வண்டினங்கள் அமலனது மௌலி மருவிய சுகந்தத்தை அங்கடைந்து அநுபவிக்க விருப்புற்று எல்லாம் ஒன்ருக மேலே கிளம்பும்பொழுது சிறைகளின் நெருக்கடியிஞலே திருமுடியிலிறங்கி மொய்க்கவும் முடியாமல் விலகிப் போகவும் கூடாமல் அத்திருமுடியின்மேல் இடைவிடாமல் ஒரு வட்டவடிவமாய்ச் சுற்றிக்கொண்டே யிருத்தலாலே பகவானது திருமுடிக்கு மயிற்ரேகையாற் செய்த குடையினது காந்தி போலும் ஒளியைச் செய்யா நிற்கும்.]

ஆமோதவத்யபி ஸதா ஹ்ருதயங்கமாபி
ராகாந்விதாபி லளிதாபி குணோத்தராபி,
மௌளி ஸ்ரஜா தவமுகுந்தகிரீட பாஜா
கோதே பவத்யதரிதா கலுவைஜயந்தீ: (15)

73. வன்னநிறத் திருத்துளவ மாலை மாயோன்
மார்பகத்துப் பலநாளு மருவி வாச
மன்னுமெழின் மென்மையொடு தண்மை நாகு
வளங்கயிற்ருற் ருெடையலுறு மாண்ப தேனு
நின்னளகந் தனிற்புனைந்து களைந்து தந்த
நிமலமலர் மாலைமுடி மேல தாகக்
கண்ணன்மொழிக் கற்பகப்பூங் கோதாய் கீழ்மை
கலந்ததென்பர் கற்றுணர்ந்த கலைவல் லோரே. (1)

74. வலந்தரு கோதா யன்பன் மார்பணி துளவ மாலை
நலந்தருந் தண்மை மென்மை நார்புனை மணத்த தேனு
மிலைந்துநீ யளகந் தந்த வெறிமலர் மாலை மேலோன்
குலம்பெறு முடிமே லாகிக் குலாயது கூறுங் காலே. (2)

75. வண்ணங் குணமண மென்மையி ஞர்வன மாலைநுங்கோன்
றண்ணந் தருநிறஞ் சார்ந்தாலு நின்குழல் சாத்தியருள்
பண்ணும் பரிமளப் பூமாலை யன்பர் பணிமுடிமேல்
நண்ணும் பெருமை யுடைத்தா யிருந்தது நாயகியே. (3)

76. மல்லிநா டாளு மயிலே வனமாலை
மெல்லியலு நன்மணமு மேவுகினும்—அல்லனையான்
வேலைநிகர் மார்பமுற வேய்ந்தளக நீதரும்பொன்
மாலைமுடி மன்னியதம் மா. (4)

77. நறுமணம் புணர்ந்து நாளுநெஞ் சமர்ந்து
நயப்புறு செம்மை மேவுற்றும்
உறுவதற் குரிய குணமமைந் திருந்து
மோவரும் மெல்லியல் வாய்ந்தும்
மறுவறு வைச யந்திதென் னரங்க
மன்னனுர் மௌலிசேர் நின்னேர்
பெறுகுழற் கோதை யாற்றிருக் கோதாய்
பெரிதுந்தாழ்த் திடப்படு மன்றே. (5)

[கோதற்ற கோதாய்! திருத்துழாய் மாலையானது நறுமணம் புணர்ந்ததாயினும், எம்பெருமானது திருமார்பை விட்டு அகலாததா யிருந்தாலும், செவ்விய இளந்தளங்களையியைந்திருந்தும், மேன்மையுடையதாயினும் நன்ஞரோடு தொடுக்கப்பட்டதாயினும் பகவானுடைய திருமுடியை அடைந்துள்ள தேவரீருடைய பூங் குழற் கோதையால் கீழாக்கப்பட்டதல்லவா ? வநமாலிகை என்னும் பூங்கோதை சிரித்தமுகத்தை யுடையவளாயினும், எம்பெருமாஞல் விரும்பப்பட்டவளாயினும், பகவானிடத்தில்தான் நல்லன்புடைய வளாயினும், நல்ல இனிய தன்மை யுடையவளாயினும், நற் குணங்களெல்லாம் நன்கு அமையப் பெற்றவளாயினும், பகவா னுடைய திருமுடியை அடைந்திருக்கிற தேவரீரைச் சேர்ந்தவ ளான தலையிலணியப் பெற்ற பெண் என்பவளால் தள்ளப் பட்டாள்.]

த்வந்மௌளிதாமநி விபோச் சிரஸா க்ருஹீதே
ஸ்வச்சந்த கல்பித ஸபீதிரஸ ப்ரமோதா:,
மஞ்ஜுஸ்வநா மதுலிஹோ விததுஸ் ஸ்வயம் தே
ஸ்வாயம் வரம் கமபி மங்களதூர்யகோஷம். (16)

78. உலகமெலாம் படைத்தளிக்கு மேக நாத
னுருவமுடி தனிற் புனையு முனது கூந்தன்
மலர்கமழு மாலையினின் மொய்த்துத் தேறன்
மடுத்தருந்துங் களிமயக்கால் வண்ட ரீட்டம்
குலவுமிசை தருமுழக்கங் கருணை வாரி
கொழிக்குமிரு கயற்கணறுங் கோதா யுன்றன்
வலமருவும் வதுவைபுரி காலஞ் சேரு
மங்கலவாத் தியமுழக்க மானு மாதோ. (1)

79. தென்றலிற் றிரியுங் கோதாய் சீதரன் முடிமேற் சூடும்
பொன்றரு மாலை யுன்றன் புரிகுழல் வாசஞ் சார்ந்த
தென்றுமொய்த் தளியின் கூட்ட மிசைதரு முழக்க [நின்சீர்
மன்றலுக் கியைந்த மேள வாத்திய நிகர்க்கு மாதோ. (2)

80. பணவா ளரவணை மாயோ னணிதரும் பைந்தொடையல்
குணம்வாய்ந்த கோதைநின் குந்தளஞ் சூடிக் கொடுத்த [தெனு
முணர்வா யளியினம் பல்லிசை பாடி யொலித்தலுன்றன்
மணம்வாய் பொழுதிசை மங்கல வாத்திய மானுமன்றே. (3)

81. மாலாகி மாலணிதல் வண்கோதாய் வண்டினங்கள்
மாலா முனது குழல்வனைந்த - மாலையெனச்
சீர்த்தவிசை செய்தல் திருவேநின் மன்றலிசை
வாத்தியத்தி னன்முழக்க மாம். (4)

82. வயங்குநின் மௌலி வளைந்தருண் மாலை
மான்முடி வகித்திடு மளவில்
இயங்கதன் மதுவை யிச்சையின் படிதே
னினங்களி கொண்டுகூட் டுண்டு
நயங்குல விடுமின் குரலின வாகி
நம்பெரு மாட்டியே நின்மின்
முயங்குமுன் றிலிற்செய் மன்றலின் முழங்கும்
முதன்மைசேர் முழவென முழங்கும். (5)

[ஜகந்நாதனுகிய திருவரங்கேசனுடைய திருமுடியிலே தரிக்கப்பட்ட தேவரீர் சூடிக் கொடுத்த திருமாலைகளிலிருந்து பெருகி வருகிற மதுவைத் தம் மனம் போனபடி பானம் பண்ணிக் களித்து அதனுலே மதுகரமான தொனியையுடைய மதுகரங்கள் தேவரீரது ஒளி மிளிரும் முத்துடைத் தாம நிரைதாழ்ந்த திருமணப் பந்தலில் முழங்கும் மங்கல கீதத்தைப்போல முழங்கும்.]

விச்வாயமாநரஜஸா கமலேந நாபௌ
வக்ஷஸ்தலே ச கமலாஸ்தந சந்தநேந,
ஆமோதிதோபி நிகமைர் விபுரங்க்ரி யுக்மே
தத்தே நதேந சிரஸா தவ மௌளி மாலாம். (17)

83. வாமனனு யுலகளந்த மாயோ னுந்தி
வனசமலர் வாசனையின் மதனன் மாலுங்
காமருபூந் திருமருவு மகலஞ் சாத்துங்
களபநறு வாசனையிற் கங்கை பூத்த
மாமலர்த்தா ளிடைநாளு மருவும் வேத
வாசனையிற் கோதாய்நீ வனைந்து தந்த
தாமமணி மாலிகையே யதிக வாசந்
தருவதெனத் தலையின்மிசைத் தாங்கி னனே. (1)

84. மாதவ னுந்தி யந்தா மரைநறு மணத்திற் கோதாய்
காதல்செ யகலஞ் சாத்துங் களபவா சனையிற் கால்சேர்
வேதவா சனையின் மற்றுன் வியன்குழன் மிலைந்து தந்த
தாதவிழ் மாலை தாங்கித் தயங்கினன் றலைவன் றனே. (2)

85. மாரற்குத் தாதை தனுந்தியந் தாமரை வாசனையில்
தாருற்ற மார்பக் களபத்தண் வாசனை தன்னிலடி
யாரத்திருமறை வாசனை தன்னிலன் பாரணங்குன்
பாரக் குழலணி நல்வாச மென்னப் பரித்திடுமே. (3)

86. மாலுந்தி யந்தா மரைமணத்தின் மன்னகலஞ்
சாலுங் களபத் தனிமணத்தின் - காலடிசேர்
கோல மறைமணத்திற் கோதாயுன் குந்தளஞ்சேர்
மாலையன்றோ மேலா மணம். (4)

87. இலஞ்சியி லுலக மாகுமொண் பராக
மேந்திய சரோருகத் தாலும்
நலந்திகழ் மார்பிற் றிருமங்கை கொங்கை
நண்ணறுங் கலவையி னானும்
பொலங்கழ லிணையின் மறைமல ராலும்
பொலங்கொடி வாசித னயும்
வலம்பெறு நெடுமா னின்குழன் மாலை
வணங்கிய முடிகொடு வகிக்கும். (5)

[பூங்கொடி போன்றவரே! சர்வ ஜகத்காரணனும் நியந்தாவு மான திருவரங்கச் செல்வன் அகிலாண்டங்களாகவும் பரிணமிக்கத் தக்க மகரந்தங்களையுடைய செங்கமல மலரினலும் திருநாபியி லும், அலர்மேல் மங்கையுடைய திருமுலைத் தடங்களி லணிந்

துள்ள சந்தனக்குழம்பினால் திருமார்பிலும், மறை மலரால் உபய பாதாரவிந்தங்களிலும், மிக சிலாக்கியமான நறுமணங் கமழ்ந்து கொண்டிருந்தாலும் தேவரீர் சிரமேற் சூடிக்கொடுத்தருளிய திருமாலையை அன்பினால் வணங்குதலைப் பெற்ற திருவபிஷேகத்தால் அணிந்து கொள்ளுகிறார்.]

சூடாபதேந பரிக்ருஹ்ய தவோத்தரீயம்
மாலாமபி த்வதளகைரதி வாஸ்ய தத்தாம்,
ப்ராயேண ரங்கபதிரேஷ பிபர்த்தி கோதே
ஸௌபாக்ய ஸம்பதபிஷேக மஹாதிகாரம். (18)

88. செய்யதிருப் பாற்கடலிற் றுயின்று வான்றோய்
சிகரநெடுஞ் சோலைமலைத் திகழ்ந்து தோன்றி
வையமெலாங் குறைதீர வானோர் வாழ
வடதிருவேங் கடமருவி மன்னு மாநீர்ப்
பையரவிற் றுயில்புரியு மரங்க நாதன்
பாவையருள் கோதாயுன் பாரக் கொங்கைத்
துய்யதுகில் தன்னுடனீ சூடித் தந்த
தொங்கல்தனை முடிசூடித் துலங்கு வானே. (1)

89. வார்கடற் றுயின்று சோலை மலையிடை யுறைந்து நாகப்
பேர்வரை நின்ற பெம்மான் பிறைநுதற் கோதாய் நின்சீர்
வார்முலைத் தூசு மைம்பால் வனைதரு சரமும் வாங்கித்
தார்முடி சூடியன்றோ சவிபெறத் தயங்கினானே. (2)

90. வங்கக் கடலிற் றுயின்றிருஞ் சோலை மலையுறைந்து
துங்கப் பணிமலை நின்றோனற் கோதையுன் றூயமணிக்
கொங்கைக் கலிங்கமுங் கூந்தலிற் சூடிக் கொடுத் தமலர்த்
தொங்கற் சரமு முடிமேற் றரித்துத் துலங்கினனே. (3)

91. பாலார் கடற்றுயின்று பாரநெடுஞ் சோலைமலை
மேலாகி வேங்கடத்து மேவியே—மாலானோன்
சேட்டு முலைக்கலிங்கஞ் செல்வியுன தைம்பாற்பொன்
சூட்டணிந்து மேன்மையுறுந் தொட்டு. (4)

92. ஓங்குமிவ் வரங்கத் துத்தம னுன்ற
னுத்தரீ யத்தையுங் குழலிற்
பாங்குறச் சூட்டிப் பரிமள மூட்டிப்
பரிந்தருள் பசுந்தெரி யலையும்
வீங்குசீர்க் கோதா யுத்தமாங் கத்தின்
மிசைமிலை தலிற்பெரும் பாலும்
தாங்குமங் களநிள் செல்வமா முடியைத்
தாங்கிடுந் தகைமைசார்ந் தனனுல். (5)

[ஒண்புகழ்க் கோதாய்! எவரினுமுயர்ந்த இந்தத் திருவரங்க மன்னனுர் தேவரீருடைய தனங்களிற் புனைந்துதந்த உத்தரீயத்தையும், குழலிற் சூட்டிப் பரிமளம் ஊட்டிப் பரிந்து அருளுகிற மலர் மாலையையும், உத்தமாங்கமான திருமுடியிலணிந்து கொண்ட தனுற்றன் சகல ஸௌபாக்ய ஸம்பத்துக்குச் சார்வபௌமனுகத் திருமுடி புனைதற்குரிய பெருந்தகைமையைச் சார்ந்தனர்.]

துங்கை ரக்ருத்ரிமகிர:ஸ்வயமுத்தமாங்கை:
யம் ஸர்வகந்த இதி ஸாதர முத்வஹந்தி,
ஆமோதமந்யமதிகச்சதி மாலிகாபி:
ஸோபித்வதீய குடிலாலக வாஸிதாபி: (19)

93. செய்யாத திருமொழியா யநாதி யாகித்
தெரிவரிதாய்ச் சத்தியமாய்த் திரிகா லத்தும்
பொய்யாத மறைகளெலாம் புகழ்ந்து போற்றிப்
பூரணமாங் கந்தனெனப் புகல்வ தெந்த
மெய்யாளன் றனையந்த மேலோன் றனே
வெறிந்துகடை குழைந்திருண்ட விலோதம் வேய்ந்த
நையாத கோதைதனைக் கோதை நங்காய்
நறையுடைத்தா மெனப்புனைந்து நலம்பெற் றனே.(1)

94. அந்தமின் மறைக ளெல்லாம் யாரையே சருவ மூல
கந்தனென் றுரைக்கு மந்தக் கடவுளு னளகஞ் சூடும்[னச்
பைந்துண ரணியைக் கோதாய் பரிமள முடைத்தா மென்
சிந்தனை புரிந்து தன்பொற் சிரத்திடைத் தரிப்ப னன்றே.
(2)

95. மாசறு வேத வருக்கமெ லாமந்த மாறனே நல்
வாசனே யானெனப் பேசிடு மாலந்த மாதவனே
பூசுரர் போற்றிசெய் கோதாயுன் கூந்தல் புனைந்துதந்த
ஆசறு மாலேநல் வாசனே யாமென் றணிகுவனே. (3)

96. தேசுறுநி னண்பன் றிருவே திகழ்சருவ
வாசனேயா னென்று மறையோத—மாசறநீ
சூடிக் களைந்தமலர்த் தொங்கன்மிகு கந்தமெனக்
கோடிக்குந் தன்முடிமேற் கொண்டு. (4)

97. சரதமா மறைக ளுயர்ந்ததம் முடியாற்
சருவகந் தன்னென வெவனேப்
பரவுமன் போடு பகர்ந்திடு மந்தப்
பசுந்துழாய் முகுந்தனும் மன்றல்
விரவுநின் குழலா னறுமணம் வாய்ந்த
விரிமலர் மாலேக ளாலே
வரசரோ ருகமா மலர்த்திரு முகத்தாய்
மற்ருெரு மன்றலுற் றிடுமால். (5)

[வேயர் பயந்த விளக்கே ! அபௌருஷேயங்களான மெய்ம் மறைகள் உயர்ந்த தங்கள் முடிகளென்னும் உபநிடதங்களால் மிக்க அன்போடு எந்த பகவானே சருவகந்தனென்று கொண்டாடு கின்றனவோ, அந்த பசுந்துழாய் முகுந்தனை அழகிய மண வாளனே தேவரீரது சுருண்ட திருக்குழற் கற்றையினுல் மணமூட் டப் பெற்றவைகளான மலர்மாலேகளால் பிறிதொரு திவ்விய பரி மளத்தை அடைகிருர்.]

தந்யே ஸமஸ்த ஜகதாம் பிதுருத்தமாங்கே
த்வந் மௌளிமால்ய பரஸம்பரணேநபூய:,
இந்தீவரஸ்ரஜமிவாதததி த்வதீயா ந்
ஆகேகராணி பஹுமாநவிலோகிதாநி. (20)

98. முருகுயிர்க்குஞ் செழுங்கமலத் தன்னப் பேடை
முனிந்தூடச் சேவலன முகமன் கூறி
யருகிருக்கும் புனற்பொன்னி யரங்கன் வேய்ந்த
வமலமலர்க் கோதாயு னளகஞ் சூடித்

தருவிருப்ப மணிமாலை குழைக டோய்ந்து
சகரர்நெடுங் கடல்புரையச் சவிசே ருன்ற
னிருகயற்கட் கடைநோக்க மெய்த லாலே
யெழிற்குவளை மாலையென விலங்கு மாலோ. (1)

99. பத்திரச் சுவாலை யாழிப் படையவன் முடியில் வேய்ந்த
வித்தகக் கோதாய் கூந்தன் மிலைந்துநீ யருளு மாலை
சித்திரக் கடைக்க ணோக்காற் செறியிதழ்க் குவளை மாலை
யொத்துநன் கொளிருமன்றி யுவமையெ னுரைக்கற்பாற்றே. (2)

100. நாவியங் கோதையிற் சூடிக் களைந்துநி னுதன்முடி
மேவிய வேரி மலர்மாலை யாவி வியன்புதுவை
யாவியன் னுயுன் கடைவிழி நோக்க மமைதலினுற்
காவியம் போதினிற் கட்டிய மாலை கடுக்கு மன்றே. (3)

101. நாடுபுகழ் வில்லிபுத்தூர் நங்காயு னுதன்முடி
சூடித் தரப்புனைந்த தொங்கலந்தார்—நீடியபொன்
மாவடுநேர் கட்பார்வை மன்னுதலால் வாய்மலர்ந்த
காவிமலர் மாலையொக்குங் காண். (4)

102. கோதையே நினது கோதையிற் சூடிக்
கொடுத்தருள் கோதையை விரும்பி
மேதகு நன்கு புனைதர லாலே
மிக்கநற் பேருபெற் றிலகும்
ஆதியின் முடியில் வெகுமதிப் பொடுநின்
னன்பவிர் நோக்குவைத் திடுதல்
சீதநீர்க் குவளைத் தெரியலை மேலுஞ்
சிறப்புறச் சூட்டுதல் சிவணும். (5)

[அன்னவயற் புதுவை ஆண்டாளே! தேவரீர் கோதையிற் புனைந்து தந்தருளிய கோதையை விரும்பி நன்ருகச் சிரமேற்றரித்தலால் மிக்க நற்பேறு பெற்றிலகும் ஆதியம் பகவனுடைய திருவபிடேகத்தின்மேல் வெகுமதிப்போடு தேவரீர் பல பகுமானங்கள் செய்ததுபோல் காதல் விளங்கும் ஆகேரமென்னும் கடைக்கண்ணுல் நோக்கிக்கொண்டிருத்தல் அத்திருமுடியின் மேலே மற்ருெரு குவளை மலர்மாலையைப் புனைந்திடுதல் போலாம்.]

ரங்கேச்வரஸ்ய தவச ப்ரணயாநுபந்தாத்
அந்யோந்யமால்ய பரிவ்ருத்திமபிஷ்டுவந்த:,
வாசாலயந்தி வஸுதே ரஸிகாஸ்த்ரிலோகீம்
ந்யூநாதிகத்வ ஸமதா விஷயைர்விவாதை:. (21)

103. தேற்றமுறுந் தரளமணி கொழிக்குந் தெண்ணீர்த்
திருவரங்கப் பெருமனுடன் சேர்ந்து செவ்வாய்க்
கோற்றொடியஞ் சனவிழிப்பூ ணலங்கற் கோதாய்
கொடியிடையாய் நீயெதிர்ந்து கூடி மாலை
மாற்றுவதி லிவரிலெவர் பெரிய ரென்று
மதிநாடித் துதிகூறி வானோ ராதி
நாற்றிசையோ ரெடுத்துரைக்கும் வாதப்பாட்டி
னவின்முழக்கங் கடலொலியாய் நவிற்றலாமே. (1)

104. தாற்றிளங் கமுக வேலித் தண்பணை வில்லி புத்தூர்க்
கோற்றொடி யுனது கோலக் கொழுநனோ டுவந்து மாலை
மாற்றலா லிவரில் யாவர் வலியவ ரென்று வாதம்
ஆற்றுறு மொலியவ் வாரி யதற்கிணை யறைய லாமே. (2)

105. குணமாலை சேரெழிற் கோதா யுனது கொழுநனொடு
மணமாலை மாற்றலி னின்னேரில் யாவர் வலியரெனப்
பணமாலை யம்புவி யுள்ளோர்கள் வாதம் பகருரைகள்
கணமாலை யொண்டிரைக் கார்க்கடல் போலக் கலித்திடுமே.
(3)

106. தென்னரங்கன் றன்னொடுநீ சேர்ந்து திருக்கோதாய்
மன்னு மணமாலை மாற்றுங்காற்—பன்னறிஞர்
நும்மி லெவர்பெரியோ ரென்றுநுவல் வாதவுரை
விம்முகட லென்ன மிகும். (4)

107. திருவரங் கேசன் றனக்குநின் றனக்குஞ்
சேர்தருங் கேண்மையி னாலே
ஒருவருக் கொருவர் மாலைமாற் றுதலை
யுவப்பொடு புனைந்துரை விபுதர்
மருவரு மளக வசுதையே குறைவு
மற்றுயர் வொப்பெனும் வழக்காற்
பொருவரு மார வாரமுள் ளனவாப்
புரிவராற் புவனமூன் றையுமே. (5)

[ஏவசுதையே! திருவரங்கநாதனும் தேவரீரும் கேண்மையினுலே மாற்றிக் கொள்ளும் மாலை மாற்றுதலைக் குறித்துப் புகழ்ந்து பேசுகின்ற பரமரசிகர்களில் தேவரீரிடத்தில் பக்தியுள்ளவர்கள் பகவானை மயக்கும் படியான அதிக சுந்தரமுள்ளவள் கோதையாதலால் அவள் உயர்வுடையவள் என்றும், பகாவனிடத்தில் அதிக பக்தியுடையோர் அவன் நாயகனுகவும், இவள் நாயகியாகவும் இருப்பதால் எவ்வாற்ருனும் பகவானே உயர்ந்தவர் என்றும், தடஸ்தர்கள் பலர் இருவருக்கும் உண்டான பிரணயத்தினுலே மாலை மாற்றப்பட்டதாதலால் இருவரும் ஒப்புமையுடையவர் என்றும், பேசிக் கொள்ளுகிற பூர்வபக்ஷ சித்தாந்த ரூபமான வியவகார மொழிகளாலே மூன்றுலகங்களையும் ஒப்பற்ற முழக்கத்தை யுடையனவாகச் செய்கிருர்கள்.]

தூர்வாதளப்ரதிமயா தவ தேவி காந்த்யா
கோரோசநாருசிரயா ச ருசேந்திராயா :,
ஆஸீதநுஜ்ஜித சிகாவள கண்ட சோபம்
மாங்கள்யதம் ப்ரணமதாம் மதுவைரிகாத்ரம். (22)

108. ஒருமருங்கி னுறையமுதச் சாயன்மேனி
யொண்கமலை தனதுருப்பொ னொளியு மற்ருேர்
திருமருங்கி னுறைகோதைத் தெரிவை நல்லாய்
திகழுனது மரகதப்பூந் தெய்வத் தேசும்
இருமருங்கும் படர்ந்தேறி யொன்ருய்க் கூடி
யிலங்குதலா னுமதிடையி லிருக்கு மெங்கள்
'குருவரங்கன் றிருமேனி பீலிச் செவ்விக்
குலமயிலி னெருத்தெனவே குலவு மாலோ. (1)

109. பொன்னிறத் திருவும் பச்சை புரைநிறத் திருவு மான
வன்னையங் கோதாய் நீயு மமர்தலா லரங்க நாத
னென்னுமெம் பெருமான் கோலமெய்திய வடிவ மீண்டான்
மன்னிய வெழிலார் தோகை மயிலெருத் துறமு மாதோ. (2)

110. வலப்பாற்பொன் வண்ணத் திருமாது மற்றெரு பாலிற்
கலப்பா மரகத சோபைகொ ணீயுங் கலத்தலினுல் [பச்சை
குலப்பா டுடையநற் கோதாய் சகல குணசம்பனன்
நலப்பா டுடைய மயிலெருத் தாரொளி நண்ணுவனே. (3)

111. புட்பந் தனிலுறையும் பொன்ஞெளிசேர் பூமாது
நிட்களங்கப் பச்சையொளி நீயுமாய் —நட்பின்
இருபாலும் வைகுதலா லெம்மோய்மான் மஞ்ஞைத்
திருவா ரெருத்துறமுஞ் சேர்ந்து. (4)

112. அறுகெனும் பசிய புல்லினே யனைய
வனைநின தனுவொளி யாலும்
உறுநறுங் கோரோ சனைதனை யனைய
வொண்டிரு வுருநிழ லாலும்
நறுவிய மயிலின் கயிலியன் மருவி
நாயக னெழிற்றிரு மேனி
மறுவறப் பணிவார் தமக்குமங் களமாம்
வாழ்க்கையை யருள்வதா யினவால். (5)

[பூதேவியாரே ! திருவடிதொழும் அடியார்கட்கு மங்களத்தை நல்குகிற மதுசூதனனாகியபகவானுடையதிவ்வியதிருமேனியானது தூர்வா எனும் அறுகம் புல்லின் நிறம் போன்ற பசுமைநிற முடைய தேவரீருடைய திருமேனியின் காந்தியினாலும், கோரோசனையின் வர்ணம் போன்ற பொன்னிறமுடைய ஸ்ரீ தேவியின் சோபையினாலும், விட்டு நீங்காமலிருக்கிற நல்ல மயூரத்தின் கழுத்திலுள்ள பொன்னிறங் கலந்த பச்சைவர்ணத்தையுடைய மயிலின் கயிலிலுள்ள வண்ணம் போலாயிற்று.]

அர்ச்யம் ஸமர்ச்ய நியமைர் நிகமப்ரஸூனை :
நாதம் த்வயா கமலயா ச ஸமேயிவாம்ஸம்,
மாதச்சிரம் நிரவிசந் நிஜமாதி ராஜ்யம்
மாந்யா மநுப்ரப்ருதயோபி மஹீக்ஷிதஸ்தே. (23)

113. பூந்தாது முருகுயிர்க்குங் கமுக வேலிப்
பொன்மதில்சூ ழயோத்திநகர் புரந்த சீர்த்தி
மாந்தாதா முதலிக்கு வாகு வாதி
மன்னவர்தம் மாளிகையில் வைகல் தோறுந்
தீந்தேறன் மொழிக்கோதை நங்கா யிந்தத்
திருவரங்க நாதனைப் பொற் றிருவோ டுன்னைத்
தாந்தாஞ்செய் பூசனையா லன்றோ வேக
சக்ராதி பதியாகித் தரம்பெற் றுரே. (1)

114. மாதலம் புகழு மிக்கு வாகுமாந் தாதா வாதி
ஆதவ குலத்தோ ரெங்க ளரங்கனை யயோத்தி தன்னில்
கோதையத் திருவோ டுன்னைக் குறித் தருச் சனைசெய்
[தன்றோ
வாதனத் திருந்து மங்கா தாழியொன் றுருட்டி னரே. (2)

115. நாகா திபர்புகழ் கோதா யயோத்தி நகரிலிக்கு
வாகாதி மன்னவர் மாலரங் கேசனை மாவொடுன்னை
மாகாத லோடும் வழிபாடு செய்த மகிமையன்றோ
ஏகாதி பத்திய மன்னவ ராகி யிருந்ததுவே. (3)

116. அன்ன வயல்சூ ழயோத்தி நகராளு
மன்னரிக்கு வாகுமுதன் மாந்தாதா—பொன்னை
யரிந்தமனைக் கோதையுனை யன்பாகப் பூசை
புரிந்தன்றோ பெற்றார் புகழ். (4)

117. அன்னை நின் னெடுபொன் னெடுமுறை யிறைவ
னகுமா ராத்தியன் றன்னை
முன்னைமா மறையாம் மலரினா னன்கு
முறையினா ராதனை புரிந்து
மன்னிய மகிமை வாய்ந்தவா னவரும்
மனுமுத லானமா னவரும்
பன்னரும் புகழும் மன்னருந் தமது
பதிபுரந் தனர்பல பகலே. (5)

[அன்னையே! வைவச்சுத மநுமுதல் சக்கிரவர்த்தித் திருமகன்வரையுள்ள சூரிய வமிசத்தவர்களாலும், அனைவராலும் ஆராதிக்கப்பட்டவர்களாயும் உள்ள அரசர்களும் பூரூபியாயிருக்கிற தேவரீருடனும் பொன்னியான பெரிய பிராட்டியுடனும் நன்றாய்க்கூடிக் கொண்டிருப்பவராயும், எல்லாராலும் அருச்சிக்கத் தக்கவராயும், சகல லோகநாதனையும் உள்ள பகவானை நிகமங்களிற் கூறிய நியமங்களாலே நன்றாக ஆராதனை புரிந்து தம்முடைய பூ மண்டலாதி பத்தியத்தை சந்திர சூரியர் உள்ள வரையில் நெடுங்காலம் ஆண்டு அநுபவித்துக்கொண்டிருக்கிறார்கள்.]

ஆர்த்ராபராதி நி ஜநேப்யபிரக்ஷணர்த்தம்
ரங்கேச்வரஸ்ய ரமயா விநிவேத்ய மாநே,
பார்ச்வே பரத்ர பவதீ யதி தஸ்ய நஸ்யாத்
ப்ராயேண தேவி வதநம் பரிவர்த்திதம்
[ஸ்யாத். (24)

118. மணிமுறுவற் கருநெடுங்கட் பணைத்தோ ணெய்த்து
வார்ந்திருண்ட குழற்கோதை நங்காய் மண்ணிற்
றணிவில்பெருந் தவறிழைத்தோர் தம்பால் வெம்மை
சரர்ந்துழியத் தாடாளன் றண்மை சார
அணியமுதத் திருமொழியா லொருபால் வைகும்
அருட்கமலே பொறுத் தருளென் றறையுங் காலேப்
பணிதரநீ மணிமுறுவல் பூத்து வாம
பாகமிலே யெனிற்சீர்மை படைப்பார் கொல்லோ. (1)

119. தாங்கரும் பாவஞ் செய்து சரணடைந் தோரைக் காவென்
ருங்கருள் வலப்பா டுற்ற வன்னேவேண் டிடவு மன்பு
நீங்கினே யின்றி வாம நீயிருந் திலேயேற் கோதாய்
பாங்குறுஞ் சீர்மை யின்னும் படைப்பரோ பார்க்குங்
[காலே. (2)

120. வன்பவஞ் செய்து சரணு கதியென வந்தடைந்தோர்க்
கன்புட ஞகி வலப்பா லிருந்துபொ ஞற்றுகவென்
றின்புறச் சொற்றிட நீவாம பாகத் திருந்திலேயேன்
மன்பெறும் வில்லிபுத் தூர்க்கோதை யெங்ஙனம் வாழு
[வரே. (3)

121. சாலத் தவறிழைத்தோர் சார்ந்துசர ணென்றுரைப்ப
மாலுக் கருகு வலப்புறமாய்க் - கோலப்பொன்
மாற்றுகெனெக் கோதாய்நீ வாமபா கத்திலேயே
லேற்றமிவர்க் கென்று மிலே. (4)

122. ஈரமே புலரா விரும்பிழை யிழைத்த
விவரையு மளித்தரு ளுதனின்
பாரமே யென்று திருவரங் கருக்குப்
பரிவொடு பகர்ந்திடு மளவில்

வாரமே யவன்றன் மற்றொரு பானீ
வதிந்திலை யெனிற்பெரும் பாலும்
ஆரமே யனைய திருநகை முகத்தா
யவன்பரா முகஞ்செயு மன்றே. (5)

[பகவானிடத்தில் அநேகவிதமான அபராதங்களை அப்பொழுது தான் செய்திருந்த போதிலும் தன்னைச் சரணமடைந்தவர்களான பக்தகோடிகள் ஸம்சாரதாபத்திரயங்களினின்றும் கரையேறும் பொருட்டு மாமலராளால் அரங்க நகரப்பனுக்கு தன்னைச் சரணமடைந்தோருக்கு ஒருவித குறையுமின்றி அவர் செய்த பிழை பொறுத்துக் காப்பாற்றவேண்டுமென்று அறிவித்துக் கொண்டிருக்கையில் வெறுப்பால் அமலன் திருமுகம் அயற்பக்கம் திரும்ப அந்தப் பக்கத்தில் தேவரீர் இல்லாமலிருந்தால் அந்தத் திருவரங்கநாதனுடைய திருமுகமானது இடதுபக்கம் திரும்பியபடியே இருக்கும்.]

கோதே குணைரபநயந் ப்ரணதாபராதாந்
ப்ரூக்ஷேப ஏவ தவ போகரஸாநுகூல:,
கர்மாநு பந்த பலதா நர தஸ்ய பர்த்து:
ஸ்வாதந்த்ர்ய துர்விஷஹமர்ம பிதாநிதாநம். (25)

123. அறத்தோடு மறமல்லா தாற்றி னோர்கட்
கவ்வினைகட் கீடாக வமைய நோக்கித்
திறத்தோடு நினதருட்கட் டுணைவ னென
திருவரங்கன் பணித்தருளுஞ் சேமத் தோடு
மறத்தோடு துக்கமெலாங் கதிர்வாய்ப் பட்ட
மையிருள்போ லாகுமன்றோ வருணப் பச்சை
நிறத்தோடு திகழ்கருணைக் கோதை நங்காய்
நின்னது நுதல் சிறிதசைந்து நெரிந்தா லன்றே. (1)

124. இகத்தினி லறத்தோ டன்மைக் கேற்றன வீச னல்குஞ்
சுகத்தொடு துக்க மெல்லாஞ் சுரிகுழற் கருங்கட் டோகாய்
சகத்திடை யெழுமார்த் தாண்டன் றன்மன மிருளே யாநின்
முகத்திடைப் புருவங் கோட்டி முறிந்தசைந் திடலான்
[மன்னோ. (2)

125. புலையார் பவமுந் தருமமுஞ் செய்தப் பொழுதடைந்தோர்க்
கலையார் புனற்பள்ளி கொண்டா னரங்க னளந்தளிக்கு
மலையார் சுகதுக்க மெய்யெதிர் பொய்யென மாறுமன்றே
சிலையார் புருவநற் கோதாய் தளம்புதல் செய்திடினே. (3)

126. சக்கரஞ்சேர் கையான் சரண்புகுந்தோர் தங்கள்வினை
யொக்க வுணர்ந்திது வென் றேர்ந்துதவுந் - துக்கசுக
மீரப் பனிமலர்க்க ணெம்மோ யிரிந்திடுமுன்
பூருச் சிலைவளைந்த போது. (4)

127. என்னையே யின்பச் சுவைக்குத வியதா
யிருப்பதுங் குணங்களால் வணங்கும்
அன்பரின் பிழையை யொழிப்ப துமாகி
யவிருநின் னன்னுத லொசிவே
முன்வினைப் பயனீ வதில்விருப் புமிகும்
முதல்வனின் சுதந்திரத் துவத்துத்
துன்னிய துரபி மானத்தின் மருமந்
துளைப்பதின் முதற்கரு வியதாம். (5)

[கோதாதேவியே! போகரஸாதிகளை அநுபவிப்பதற்கு அநுகூலமாயும், பகவானுடைய திருவுள்ளத்தைத் தன் வசப்படுத்தும்படி விவிதவிலாச ரூபமான வாத்ஸல்யாதி குணங்களாலே தன்னைச் சரணம் புக்கவர் அபராதங்களனைத்தையும் செய்தவர்கட்கு யாதொரு தீங்கும் நேராதபடி அவற்றை நீக்கிக்கொண்டு மிருக்கிற தேவரீரது நற்புருவங்களின் அசைவுதானே கருமங்களாலே நன்றுய்க்கட்டப்பட்டவர்களுக்கு அந்தந்த கருமங்களுக்குத் தக்க பலனைக் கொடுக்க வேணுமென்கிற எண்ணமுடைய விருப்புமிகும் நாயகனின் சுவாதந்தரியத்தினுடைய பொறுக்க முடியாத உயிர் நிலையைப் பிளப்பதில் ஆதிகாரணமாக ஆகின்றது.]

ரங்கே தடித்குணவதோ ரமயைவ கோதே
க்ருஷ்ணும்புதஸ்ய கடிதாம் க்ருபயா ஸுவ்ருஷ்ட்யா,
தௌர்கத்ய துர்விஷவிநாசஸுதாநதீம் த்வாம்
ஸந்த: ப்ரபத்ய சமயந்த்யசிரேண தாபாந். (26)

128. நெறிந்திருண்டு சுருண்டுகடை குழன்று வார்ந்து
நெய்த்தறனேர் குழற்கோதா நிதியே நீண்டு
மறிந்தநின தருளுக்க மதனு லன்றே
மதியுடையோர் கதியான வாளை தாவிச்
செறிந்தமணிக் கமுகமடல் கிழிக்குந் தெண்ணீர்த்
திருவரங்கத் தொருமேகஞ் செம்பை யோடு
முறைந்ததெனத் திருவினொடு முறைவோன் றுப
மொருமூன்று மகற்றவுயர்ந் தோங்கு வாரே. (1)

129. மின்னிய திருவி னோடு மேவிய மேக மன்னன்
றன்னடி யார்கண் மூன்று தாபமு மகற்றி யாள்தல்
மன்னரும் வில்லி புத்தூர் வருந்தரு வனைய கோதாய்
நின்னருட் கடைக்க ணேக்க மெய்திய நீர்மை யன்றே. (2)

130. மின்னர் தடமதில் வில்லிபுத் தூர்வரும் வேயர்குலப்
பொன்னே யுனதருள் கொண்டல்ல வோகஞ்சம் பூத்தலர்ந்த
முன்னுக மென்னத் திருவோ டுறையு முதல்வனெங்கோன்
மன்னு ரடியவர் முத்தாபக் கோதற மாற்றுவதே. (3)

131. மின்னனைய பூவையொடு மேகமென வீற்றிருக்குந்
தென்னரங்கன் தன்னடியார் சேமமுறத்—துன்னியமுத்
தாபமெலா மாற்றல் தடங்கோதாய் நீநோக்கு
மாபலத்தா லன்றே மகிழ்ந்து. (4)

132. அன்னையே மன்னு மரங்கமா மாகத்
தவிர்திரு மின்னமர் மாலாந்
தென்னையேய் மாலின் கருணைமா மழையாற்
றிகழ்வதுங் கொடுநர கென்னுங்
கொன்னையே விளைவெவ் விடமொழிப் பதுமாங்
குளிர்சுதா சிந்துவா முன்னைப்
பொன்னையேய் புனிதர் படிந்துவல் விரைவிற்
போக்குகின் றனர்மும்மை வெம்மை. (5)

[சூடிக் கொடுத்த சுடர்க் கொடியே! பொன்னையேய் புனித ரான பெரியோர்கள் திருவரங்கத்தி லுள்ளவரும், பெரிய பிராட்டி யாகிய மின்னற் கொடியுடன் கூடியவருமாகிய கருமை வாய்ந்த மேகம் போன்ற அரங்கச் செல்வனின் கருணைமா மழையால்

பெருகி விளங்குவதும், சம்சாரமாகிற கொடிய கெட்ட விஷத்தைப் போக்கடிப்பதில் அமுத நதியாகிய தேவரீரைப் படிந்து சம்சாரதா பத்திரயங்களையும் அதிவிரைவில் போக்குகின்றனர்.]

ஜாதாபராதமபி மாமநுகம்ப்ய கோதே
கோப்த்ரீ யதி த்வமஸி யுக்தமிதம் பவத்யா :,
வாத்ஸல்ய நிர்பரதயா ஜநநீ குமாரம்
ஸ்தந்யேந வர்த்தயதி தஷ்டபயோதராபி. (27)

133. புரிந்தேறி யியற்கைமணம் பொருந்தித் தெய்வப்
புழுகளைந்து நீண்டகுழற் பொன்னே கோதாய்
பரிந்தாரப் பால்பருகும் பாலன் றுயார்
பயோதரத்தைக் கடித்துவிடிற் பாச நீங்கிக்
கரிந்தேற முனிந்துருத்துக் கடிவ தாகக்
கண்டதுண்டோ காசினியி லதுபோ ணுயேன்
தெரிந்தேனுந் தெரியாம லேனுஞ் செய்த
தீங்கனைத்தும் பொறுத்தருணீ செய்கு வாயே. (1)

134. நால்வகைப் பயனும் நல்கும் நங்கடங் கோதாய் பிள்ளை
பால்குடித் திடுங்கால் வண்ணப் பயோதரங் கடித்தா லன்னை
மாலற முனிவாள் கொல்லோ மற்றது போல நாயேன்
சீலமற் றறிந்து செய்த தீவினை தீர்த்தாள் வாயே. (2)

135. விரிந்தடர் பூம்பொழில் வில்லிபுத் தூர்வரு மெல்லியல்பால்
அருந்துறு பாலன் றனங்கடித் தாலஃ தன்னையறிந்
திருந்தறச் சீறிக் கடிவள்கொல் லோநலஞ் செய்தறியேன்
தெரிந்தறி யாமற் புரிந்தவெப் பாவமுந் தீர்த்தருளே. (3)

136. தெளிந்துந் தெளியா துஞ் செய்தபிழை யெல்லாங்
களங்கமறக் கோதாய் களைவாய்—பளிங்கனபால்
தன்னை யருந்துந் தனங்கடித்தாற் றன்குழந்தை
யன்னை முனியாண்மற் றுங்கு. (4)

137. குற்றமுற் றவுஞ்செய் குற்றவென் றனையுங்
குளிரளி யினுக்கிலக் காக்கிச்
செற்றமுற் றிடாம லளித்தரு டலைநீ
செய்தவ ளாகினை யானல்

நற்றவர் பற்றே நிற்கிது தகுமால்
நனிதவக் கடிபடு நகிலே
யுற்றவ ளாயும் பெற்றதாய் சுதனே
யுவந்தமு தூட்டியே வளர்க்கும். (5)

[அகிலாண்டம் அவாவும் அன்னையே! தேவரீர் அடியேன் அறிந்தும் அறியாமலும் செய்துள்ள அநேகவிதமான அபராதங்களை உடையவனாகப் பிறந்திருந்தாலும், அடியேனை தேவரீர் அருளுக்கு ஆளாக்கி அளித்து அருளுபவராக ஆவீரேயானால் இவ்விரட்சண காரியம் சகலலோக ஜநநியாகிய தேவரீருக்கு மிகவும் உசிதமே. ஏனெனில் வருந்திப் பெற்றுவளர்த்த தாயானவள் தன் குழவி தன் தனங்களை நன்றாய்க் கடித்துவிட்டாலும் அக்குழந்தையினிடத்துள்ள வன்பினால் அதைத் தன் அமுதூட்டி அதனாலே காப்பாற்றுகிறாளன்றோ!]

சதமகமணிநீலா சாருகல்ஹாரஹஸ்தா
ஸ்தநபர நமிதாங்கீ ஸாந்த்ரவாத்ஸல்யஸிந்து:,
அலகவிநிஹிதாபிஸ் ஸ்ரக்பி ராக்ருஷ்டநாதா
விலஸது ஹ்ருதி கோதா விஷ்ணுசித்தாத்மஜா ந:
(28)

138\. பொங்கியவிந் திரநீல மணியே போலப்
பொலிநிறமும் புன்னகையும் பொற்பு வாய்ந்த
செங்கழுநீர் மலர்க்கரமும் பணைத்து வீங்கித்
திரண்டதன பாரமதாற் சிறிது வாங்கும்
அங்கமுந்த னடியாருக் கருளு நாத
னவாவுறுந்தா ரணிகுழலு மாகத் தோன்றும்
எங்கள்குலப் பட்டர்பிரான் மகளாய் வந்த
எழிற் கோதை யிணையடிக ளிறைஞ்சி வாழ்வாம். (1)

139\. இந்திர நீலத் தேசு மெருமண மார்ந்த கையும்
வந்தெழு தனத்தாற் சற்று வளாவிய தனுவு மாலோன்
சிந்தனை புரியு மாலை செறிதரு குழலு மாகப்
பந்துரம் பொருந்துங் கோதை பதயுகம் பணிதல்
[செய்வாம். (2)

140. சிற்றுத செங்கு வளையார் கரமுந் திருநெடுமால்
பற்றூர் படலையைம் பாலுமஞ் சார்தன பாரமதாற்
சற்றே வணங்கு சரீரமு மாமணி தன்னுருவு
முற்று ளனைத்தையும் பெற்றாள் தண் கோதையெ
[னுள்ளத்தளே. (3)

141. மால்விரும்பு மாலை மலர்க்குழலு மாமணிநேர்
மாலுருவுஞ் செங்கு வளைக்கரமுங்—கோலமுலை
வன்பொறையாற் சற்று வளையுடலு மாங்கோதை
தன்சரண நெஞ்சுறையுஞ் சார்ந்து. (4)

142. இந்திர நீல மணியினீ னிறத்தா
ளெழில்கொள்கல் லாரவண் கரத்தாள்
அந்தன பரத்தால் வணங்கிடு மெய்யா
ளரும்பெருங் கருணையங் கடலாள்
குந்தள வாச வாசிகை வசமாக்
கொண்டருள் கொழுநனை யுடையாள்
செந்தமிழ்ப் புதுவை யந்தணன் புதல்வி
சிறந்தில குகநம துளத்தே. (5)

[இந்திரநில மணியைப்போல் விளங்குகிற நீலமான தேக காந்தியுடையவரும், செங்கழுநீர் மலரால் அலங்கரிக்கப்பெற்ற அழகிய திருக்கையையுடையவரும், அந்தனபரத்தால் சிறிது வளைந்து தோன்றுந் திருமேனியையுடையவரும், அடியார்க்கரு ளும் கருணையங்கடலாளராயும் தான்குழற்கற்றையிற் சூடிய மாலையால் ஜகந்நாதனைத் தன் வசமாக்கியவராயும், தண்டமிழ்ப்புதுவை விட்டுசித்தன் திருமகளாராகிய கோதாதேவி அடியார்களுடைய நம்முடைய இதயகமலத்தில் வீற்றிருந்து விளங்கக்கடவர்.]

இதிவிகஸிதபக்தேருத்திதாம் வேங்கடேசாத்
பஹுகுணரமணீயாம் வக்தி கோதாஸ்துதிம்ய:,
ஸ பவதி பஹுமாந்ய ஸ்ரீமதோ ரங்கபர்த்து :
சரணகமலஸேவாம் சாச்வதீமப்யுபைஷ்யந். (29)

143. விரிந்தவட கலைக்கடலை யருந்து மேகம்
வேதாந்த தேசிகன்வாய் மிளிர்ந்து தானாய்
வரும்பெரிய காவியாமா மிந்தக் கோதா
மான்மியமன் புடனோடி மனனஞ் செய்தோர்
திருந்துமெழிற் காளமுகில் போலு மெங்கள்
திருவரங்க நாதனருட் செல்வம் வாய்ந்து
மருந்துறமும் பட்டர்பிரான் றன்னைப் போல
மங்காத நலனடைந்து வாழ்வார் மன்னோ. (1)

144. செகதலம் புகழ்வே தாந்த தேசிக னருளிச் செய்த
மகிமைசா லிந்தக் கோதா மான்மிய மதனைக் கற்றோர்
ககபதி யாகி வந்த கழைக்குலக் கவிஞன் போலத்
திகழொளி பொருந்தி யையன் றிருவடி நிழல்சேர் வாரே.(2)

145. தேனா மிதுவென வேதாந்த தேசிகன் செந்துவர்வாய்
தானாய் வருமிந்தக் கோதா மகான்மியந் தன்னைக் கற்றோர்
வானாரும் பட்டர் பிரான்போற் சகல வளமருவி
மானாகங் கார மிலாதநல் வாழ்விடை மன்னுவரே. (3)

146. மேதினியெ லாம்புகழும் வேதாந்த தேசிகன்சொல்
மாதர் செயுங்கோதா மான்மியத்தை—யாதரவாய்ப்
போற்றினோர் பட்டர்பிரான் போலப் புகழ்மருவி
வீற்றிருப்பர் வைகுந்த மேல். (4)

147. தென்புதுவை யந்தணர்த நந்தனவ நந்தனில்வ
ளர்ந்ததுள வந்த னில்வரும்
பொன்பதயு கம்பரவு மன்பனுளி ருந்துவெளி
பொங்குதுதி யின்ற மிழிதை
யன்பொடுப கர்ந்துதுதி முன்பரெவ ரிங்கவர்க
ளந்திருவ ரங்க னருளால்
மன்புகழு மின்பமும மைந்துபின்வை குந்தமெனும்
வண்பதியி லின்பு றுவரே. (5)

[தென்புதுவைப் பட்டர்பிரான் பூங்கோதையார் பாதாரவிந்தத்தில் ஈடுபட்ட பக்தனான ஸ்ரீவேதாந்த மகாதேசிகனிடத்தில்

புருஷப்பிரயத்தனமின்றித் தானுய் உண்டானதும், பலவிதமான காவிய குணங்களால் மனோக்கியமானதுமான கோதாஸ்துதியை அன்போடு அநுதினமும் பாராயணம் செய்பவர் திருமாமகளோடிலங்கும் திருவரங்கநாயகனுடைய திருவடித்தாமரையில் பக்தியைப் பூர்ணமாக அடைந்து இம்மையிலும் விட்டு சித்தரைப் போல யாவராலும் மதிக்கப் பெற்று மறுமையிலும் மோட்சத்தையும் அடைந்து இன்புறுவர்.]

லக்கம். வெளியீட்டின் பெயர்.	வள்ளலார் பெயர்.
22. திருநரசிங்கர் மாலை.	ஸ்ரீமான் கமலாபுரம் ஆர். ராமஸ்வாமி அய்யங்கார் அவர்கள் திருத்தேவியார் ஸ்ரீரங்கநாயகி அம்மாள்.
23. அழகியசிங்கர் மாலை.	ஸ்ரீமான் எம். பி. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் அவர்கள்.
24. பொய்கையார் மாலை.	ஸ்ரீமான் மங்கலம் இராமாநுஜய்யங்கார் அவர்கள்.
25. ஸ்ரீ ஆண்டாள் சந்திரகலா மாலை.	சிறந்த தேசிக பக்தர்.
26. வாரணமாயிரமாலை.	ஸ்ரீமான் பி. எஸ். திருமலை அய்யங்கார் அவர்கள்.
27. ஸ்ரீ பார்த்தசாரதி யம்மான் பாமாலை.	ஸ்ரீமான் பி. எஸ். கோவிந்தராஜய்யங்கார் அவர்கள்.
28. தமிழரேத்தும் ஸ்ரீ மணவாளமாமுனிகள்.	சந்தமிகு செந்தமிழ்ச் செல்வர்.
29. திருச்சின்னமாலை.	ஸ்ரீமான் கே. துரைசாமி அய்யங்கார் அவர்கள்.
30. திருவேங்கடவர்மாலை.	நான்மறையாளர்கள்.
31. மார்கழி மாலை.	ஸ்ரீமான் பூண்டி அச்சுத கோபாலாசாரியார் அவர்கள்.
32. மதுரகவி மாலை.	ஸ்ரீமான் கே. எஸ். ஸ்ரீநிவாஸாசாரியார் அவர்கள்.
33. திருவருட்சதக மாலை.	ஸ்ரீமான் என். கிருஷ்ணய்யங்கார் அவர்கள்.
34. சீரொன்று தூப்புற்றனியன் மாலை.	அருள் வரதரடியார்.
35. மும்மறைத் தெளிவுப்பொருண் மூதுரை மாலை.	ஸ்ரீமான் அமிஞ்சிக்கரை ஆதிநாராயண ஸ்வாமி ரெட்டியார் அவர்கள்.
36. அருளாளர் மாலை.	ஸ்ரீமான் திண்டுக்கல் ராமஸ்வாமி அய்யங்கார் அவர்கள்.
37. பூங்கோதை மாலை.	ஸ்ரீமான் பி. எஸ். கிருஷ்ணய்யங்கார் அவர்கள். ஸ்ரீமான் பி. எஸ். நாராயணய்யங்கார் அவர்கள்.

பெறும் இடம்: ஆநந்த பிருந்தாவநம்,
ஸ்ரீ மௌனசுவாமிகள் மடத்துத் தெரு, அம்பத்தூர்.

† இவ்வடையாள மிடப்பெற்றவை இப்போது கைவசமில்லை.

5A
5-60